மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

மணி 2 • 24-4-60 • விலை 16 காசுகள் • ஒலி 25

நாம் ஆபத்துக்காரர்களென்று டெல்லி பத்திரிகை கூறுகின்றது! நாம் ஆபத்துக்காரர்கள் தான் என்று ஒப்புக்கொள்கிறோம்!

கொள்ளைக்காரர்களுக்கும், சுரண்டுபவர்களுக்கும் ஆபத்தானவர்கள்,

ஆட்சிபுரிய விரும்பவில்லை அரசைப் பெறவே விரும்புகிறோம்!

சென்னை ராயபுரம் 2-வது வட்டத்திலுள்ள மறைந்த மாவீரன் தூத்துக்குடி கே. வி. கே. சாமி பகுத்தறிவு பாசறையின் ஆண்டு விழாக் கூட்டம் 14-4-60 தேதி நடைபெற்றது.

திரு.நாராயணன் தலைமை வகித்தார்.

சென்னை நகரமன்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் என். ஜீவரத்தினம், வட்டத்து நகர மன்ற உறுப்பினர் வேதாச்சலம், அன்புரோஸ், காஞ்சி கல்யாண சுந்தரம் ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வரும் பணிகளைப் பற்றியும், வடநாட்டு ஏகாதிபத்தியத்தால் தென்னகம் தேய்ந்து வருவது பற்றியும் நகர மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் செய்த பணிகளைப் பற்றியும், மாற்றுக் கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அதன் தலைவர்களையும் கண்ணியமற்ற முறையில் தாக்கி வருவது பற்றியும் பேசினார்கள்.

பின் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுவதற்கு முன் வந்தார்! அவருக்குப் பல கிளைக்கழகங்கள் சார்பாக கைத்தறி ஆடைகள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் சுமார் 20 குழந்தைகளுக்கு பெயர் சூட்டினார்.

அண்ணா அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடனும், கை ஒலிகளுக்கிடையேயும் பேசியதாவது:

சென்னையில அண்ணா முழக்கம்!



அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! மதிப்பிற்குரிய தாய்மார்களே! பெரியோர்களே!

இன்று இங்கு நடைபெறும் மறைந்த மாவீரன், தூத்துக்குடி தந்த தங்கம், கொள்கைக்காக உயிர் துறந்த உத்தமன் கே. வி. கே. சாமியின் பெயரால் நிறுவியுள்ள இந்தப் பாசறையின் ஆண்டு விழாவில் கலந்து உங்களிடையே பேசும் வாய்ப்பினை நல்கிய நமது நண்பர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

இன்று இந்த வட்டத்து மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணியில் அக்கறை காட்டி, அதன் கொள்கையில் ஆர்வம் மிகுந்து இவ்வளவு பெருந் திரளுடன் கூடியிருப்பது கண்டு அளவற்ற மகிழ் வெய்துகிறேன்.

சிறப்பாக தாய்மார்கள் இவ்வளவு பெருந் திரளாக வந்திருப்பது கண்டு இன்னும் அதிகமாக மகிழ்ச்சி கொள்கிறேன்.

அவர்கள் எல்லாம் எதற்காக வந்திருக்கிறார்கள்! நமது கொள்கைகளைப் பற்றி நமது லட்சியத்தைப் பற்றி விளக்கம் பெறவும் நாம் புரிந்து வரும் பணிகளின் உண்மைகளைத் தெரிந்து கொள்ளவுமே இவ்வளவு திரளாக வந்திருக்கிறார்கள்.

எனக்கு முன் பேசிய எனது நண்பர்கள் அனைவரும் மாற்றுக் கட்சித் தோழர்களும், அதன்

(3ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 24-4-60 — ஒலி 25

நம் கழகத் தேர்தல்!

நமது பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தலுக்கான நாட்களை வெளியிட்டு, புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் படி கேட்டுக் கொண்டிருக்கிறார்!

எல்லா கிராமக் கிளைக் கழகங்களுக்கும், எல்லா நகரக் கிளைக் கழகங்களுக்கும், எல்லா மாவட்டக் கழகங்களுக்கும் இப்போது தேர்தல் நடைபெற இருக்கிறது! கழகத் தோழர்கள் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள்!

பொதுத் தேர்தலில் செலுத்துகின்ற கவனத்தை விட இந்தத் தேர்தலில் நாம் அதிக கவனம் செலுத்தி, நல்ல நிர்வாகத் திறம் படைத்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் எல்லோருமே திறமை வாய்ந்தவர்கள் தான், எல்லோருமே தகுதி படைத்தவர்கள் தான், எல்லோருமே நல்ல ஆற்றலுடையவர்கள் தான்! இதை எவருமே மறுக்க முடியாது! ஆனால், தேர்தலின் மூலம் இப்போது பொறுப்பேற்கப் போகின்றவர்கள் எதிர் காலத்தில் பெரும், பெரும் நெருக்கடிகளை சமாளிக்க வேண்டும் என்பதையும் கொஞ்சம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்!

சலியாத உழைப்பாளிகளை, கொள்கை வழுவாத செயல் வீரர்களை, அல்லும், பகலும் கழகப் பணிபுரிந்திடும் நல்லவர்களை, நெடுங்காலமாக அரசியலில் ஈடுபட்டு ஏசலையும், பூசலையும் தாங்கி, தாங்கி மனப்பக்குவமடைந்தவர்களை, உணர்ச்சி வயப்படாமல், கொள்கை மீது கண்ணும் கருத்துமாக இருப்பவர்களை நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுத்து எதிர்கால நெருக்கடிகளை சமாளிக்க வேண்டும்!

மக்களிடம் தொண்டு புரிந்து, மக்களின் செல்வாக்கைப் பெற்றுள்ளவர்களுக்கு முதலிடம் தர வேண்டும்!

ஒரு கிராம கிளைக் கழக செயலாளருக்கு அந்தக் கிளைக் கழகத்தின் நிர்வாகத்தை நிர்வகிக்கும் பொறுப்பு மட்டுமே இருப்பதாக நினைக்கக் கூடாது! அந்த கிராம மக்களுக்கு ஏதாவது தொல்லைகள் ஏற்பட்டாலும், தீங்குகள் உண்டானாலும் அவைகளையும் களைய வேண்டும்! கிராம நலத்திற்கும், கிராம மக்களின் நல்வாழ்வுக்கும் பாடுபட வேண்டும்!

இதே போல நகர கழகச் செயலாளரும், மாவட்டக் கழகச் செயலாளரும் பணிபுரிய வேண்டும்! நகர மக்களுக்கு ஏதாவது தீமைகள் உண்டானால் அந்தந்த அதிகாரிகளைச் சந்தித்து வாதாடி பரிகாரம் தேடித் தரவும் முன்வர வேண்டும்! இந்த பணிகளை செய்யும் தகுதியும், மனப்பக்குவமும் கொண்டவர்களையே கழகத் தோழர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்!

காங்கிரஸ் கட்சியைப் போல் "நீ தான் செயலாளர், நீ தான் பொருளாளர்" என்று நாமும் தேர்தல் நடத்தக் கூடாது!

ஒரு கிளைக் கழகம், ஒருவரை செயலாளராக, பொருளாளராக தேர்ந்தெடுப்பதற்கு முன்பு, அவர்களுடைய முன்னாள் அரசியல் நடவடிக்கைகளை, பணிகளை, செயல் முறைகளை, நடத்தைகளை, கொள்கை உறுதிப்பாட்டை பற்றியும் கவனித்து தேர்ந்தெடுக்க வேண்டும்!

நிர்வாகப் பொறுப்பை மேற்கொள்ளும் எவருக்கும் கட்டுப்பாடு மிக மிக அவசியமானதாகும்! கடமையுணர்ச்சி மிக மிகத் தேவையானதாகும்! எல்லாவற்றையும் விட கண்ணியம் காக்க வேண்டும்!

எந்த ஒரு அரசியல் கட்சியிலும் சில பல நேரங்களில் கருத்து வேற்றுமைகள், கொள்கை மாறுபாடுகள், தேவைப்படாத சில தவறான சூழ்நிலைகள் உண்டாகக் கூடும்! அந்த நேரங்களில், நிர்வாகிகளுக்கு கட்டுப்பாடு, கொள்கை உறுதிபாடு அவசியமானதாகும்!

இதையெல்லாம் மனதில் கொண்டு கழகத் தோழர்கள் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்!

இப்போது நிர்வாகிகளாகப் பொறுப்பேற்றுக் கொள்ளப் போகின்றவர்கள் காலத்தில் தான் பொதுத் தேர்தலும் நடைபெற இருக்கிறது! பொதுத் தேர்தலில் நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம், மிக ஏராளம்!

பொதுத் தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டுமானால் பேச்சு மேடைகளை மட்டும் நம்பி இருக்கக் கூடாது! தினம், தினம் மக்களை நேரில் சந்திக்க வேண்டும்! அவர்களுக்கு நாட்டின் நிலையை, ஆட்சியாளர்கள் செய்து வரும் தீங்குகளை விளக்கமாக எடுத்துச் சொல்லி நாட்டுப் பிரிவினையைப் பற்றி தெளிவாகக் கூற வேண்டும்! மக்களுடைய அன்பை, ஆதரவை, பாசத்தை இன்னும் அதிகமாகப் பெற வேண்டும்! இதைச் செய்வோமானால் நாம் தான் உறுதியாக வெற்றி பெறுவோம்!

தேர்தலுக்கு நம்முடைய பொருளாதாரத்தையும் கொஞ்சம் சரி செய்துக் கொள்ள வேண்டும்! தேர்தல் நிதி கட்டாயம் நாம் சேர்ப்பதற்கு பாடுபட வேண்டும்! இதற்கு சலியாத உழைப்பு அவசியம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது! இதற்குத் தகுதியுடையவர்களைத்தான் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்!

யாருக்கும், எந்த கட்சிக்கும் கிடைக்காத பெரும் பொக்கிஷம் நமக்குக் கிடைத்திருக்கிறது! அந்த அறிவுப் புதையலை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

நமக்கு தான் அண்ணா உண்டு, நம் அண்ணாவுக்குத்தான் மக்களை, அன்பால் பாசத்தால், நேசத்தால், பேச்சால், எழுத்தால் கவரும் சக்தியும் உண்டு! இந்த மாபெரும் சக்தி படைத்த தலைவன் காலத்தில் நாம் விடுதலையடையவில்லை என்றால் பிறகு எப்போதுதான் விடுதலைப் பெறப் போகிறோம்!

அறிஞர் அண்ணா அவர்களை வைத்துக் கொண்டுதான் நாம் பெரும், பெரும் சாதனைகளை சாதிக்க வேண்டும்! இதற்கு ஏற்ற வகையில் கழகத் தோழர்கள் பணிபுரிய வேண்டும். நல்ல திறமையும், தகுதியும், அஞ்சா நெஞ்சமும் கொண்ட நிர்வாகிகளைத் தேர்தெடுத்து, அண்ணாவுக்கு உறுதுணையாக நின்று நாட்டை மீட்கும் பணியில் ஈடுபட வேண்டும். என்பது தான் எங்களுடைய ஆசையாகும்! இலட்சக் கணக்கான கழகத் தோழர்களின் ஆசையும் இதுதான்!

நாட்டு விடுதலைக்கு இடையூறு புரியாதீர்கள்!

துரோகிகள் என்ற பட்டத்தையும் பெறாதீர்கள்!

"நாங்கள் கேட்கும் நாட்டு விடுதலைக்கு இடையூறாக இருந்து எதிரிக்குக் கையாட்களாக இருக்காதீர்கள் இந்த நாடு விடுதலை அடைவது நிச்சயம். அப்போது எதிர்கால இளைஞர்கள் உங்களை ஏசி இகழ்வார்கள் துரோகிகளெனத் தூற்றுவார்கள்.

எதிர்காலத்தில் வரையப்படும் சரித்திரத்தில் உங்கள் பெயர் துரோகிகள் பட்டியலில் சேரும்.

இப்படி துரோகம் செய்தவர்கள் நாட்டு மக்களால் தூற்றப்பட்டு இகழப்பட்டு மக்கள் துரோகிகளாக ஆகியிருக்கிறார்கள்.

—அறிஞர் அண்ணா

அவர்களுக்குப் பேச ஒன்றுமில்லை எனவே நம்மை ஏசுகிறார்கள்!

ஏசும் வரை ஏசட்டும்-அதனால் நாம் அழிந்துவிட மாட்டோம்!

(அண்ணா பேச்சு)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களும் என்னையும், நமது கழகத்தையும் ஆபாசமான முறையில் தாக்கி வருவதைப் பற்றிப் பேசினார்கள்.

சிறப்பாக தோழர் அன்புரோஸ், மாற்றார் பேசுவது கண்டு சகிக்க முடியவில்லை என்று வருத்தத்துடனும், ஆத்திரத்துடனும் பேசினார்.

நான் அவர்களுக்கு கூற ஆசைப்படுகிறேன் மாற்றார் தூற்றுகிறார்கள் என்றால் அவர்கள் தூற்றாமலா இருப்பார்கள்,

சகிக்க முடியவில்லை என்கிறார்கள், ஏன் சகிக்க முடியவில்லை. சகிக்கத் தான் வேண்டும்.

நான் சகிக்கிறேனே, நீங்கள் ஏன் சகிக்கக் கூடாது. தூற்றுவதைப் பெருமையாகக் கொள்ளுங்கள். இன்று நேற்று என்னைத் தூற்றுகிறார்கள். நீண்ட நாட்களாகவே என்னைத் தூற்றுகிறார்கள். தூற்றுதலாலேயே வளர்ந்தவன் திட்டு வாங்கியே என் உள்ளம் உரம் பெற்றிருக்கிறது. அதனால் நான் கெட்டு விடவில்லை. ஆகவே நாம் அவர்கள் தூற்றுவது கண்டு நமது பண்பிழந்து விடக் கூடாது. திருப்பித் தாக்கக் கூடாது.

அவர்கள் தாக்குவதைக் கண்டு சந்தோஷம் கொள்ளுங்கள் என்னைத் தாக்குவது பற்றி நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் அதுப் பற்றி கவலைப்பட வேண்டாம். நானே கவலைப் படாத போது நீங்கள் ஏன் அதிகம் கவலைப்படுகிறீர்கள்,

என் மீது உங்களுக்கும் பாசமிருப்பது உண்மையானால், என்னை நீங்கள் பின்பற்றுவது உண்மையானால் இனிமேல் நான் இருக்கும் போது அவர்கள் தாக்குவது பற்றிப் பேசாதீர்கள் அதை விட்டு விட்டு நமக்குத் தேவையானது பற்றிப் பேசுங்கள்.

ஒருவர் என்னை எழுதிக் கேட்டிருக்கிறார், நானும் நண்பர் கருணாநிதியும் பெட்டவாய்த்தலை சர்க்கரைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த ஆதரவு கூட்டத்திற்கு பயந்து கொண்டு வரவில்லை என்று கூறுகிறார்களே அதன் காரணம் விளக்குங்கள் என்று.

அவர்களிடம் கூறுங்கள் கொஞ்சம் பொறுத்திருக்கும்படி திரு. கல்யாணசுந்தரமும், கருணாநிதியும் சேர்ந்து வேலை நிறுத்தத்தை நிறுத்தி விடும் படி விட்டிருக்கும் அறிக்கையை படிக்கும்படி கூறுங்கள் அதற்குள் அவசரப்பட வேண்டாம்.

மற்றும் நமது நண்பர்கள் கூறினார்கள் மாற்றுக் கட்சியார்கள் "அறிஞர்-அடுக்கு மொழியார்" என்ற நாடகம் எழுதி நடிக்கிறார்கள் என்றும் அதில் என்னைத் தாக்குகிறார்கள் என்றும்.

அதனால் என்ன கேடு வந்து விடப் போகிறது. நாடகம்நன்றாக நடிக்கட்டும்.

இந்த நாடகத்தைத் தெரு தெருவாக நடிக்கட்டும்! அது நமக்கு நன்மை தானே நீங்களெல்லாம் என் மீது அன்பு கொண்டு பாசத்தால் "**அறிஞர்**" என்று **அழைக்**கிறீர்கள். **அவர்கள் அடுக்கு** மொழியார் ஒன்றைச் சேர்த்து **அழைக்**கிறார்கள். இது நமக்கு லாபந்தானே.

வீணாக மாற்றார் தூற்றுகிறார்கள் என்று கூறிக் கொண்டு அதற்காக கவலைப்படுவது சரியல்ல.

மாற்றுக் கட்சிக்காரர்கள் நம்மைத் தூற்றுகிறார்கள் என்று கவலைப் பட்டுக் கொண்டிருப்பது சரியில்லை.

சாலைகளில் மோட்டார் ஓடுகிறது. பெட்ரோலில் ஓடும் மோட்டாராக இருந்தால் புகை வராது; டீசல் எண்ணையில் ஓடும் மோட்டாராக இருந்தால் புகை வரும் பெட்ரோல் வண்டியாக இருந்தாலும் கார் பெட்டர் கெட்டு விட்டால் புகை வரும்.

இன்று காங்கிரஸ் டீசல் எண்ணையில் ஓடும் வண்டி, அதனால் புகை கிளம்புகிறது. அந்தப் புகையைப் பார்த்து நாம் ஏன் கவலைப்பட வேண்டும். மற்றும் கார் பெட்டர் கெட்ட வண்டியாக இருக்கிறது காங்கிரஸ்.

நாம் நாடு பிரிய வேண்டுமென்று கூறுகிறோம். தென்னாட்டை வடவர் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று கூறுகிறோம். வடநாடு வளம் பெற்றிருக்கிறது. வலிவோடு இருக்கிறது இதை நாம் இன்று மக்களிடம் கூறுகிறோம். நாம் கூறுவதை மக்கள் கேட்கிறார்கள். நாம் கூறும் லட்சியங்களுக்குக் காது கொடுக்கிறார்கள்.

நண்பர் கல்யாண சுந்தரம் வடநாட்டில் தொழில் வளம் பெருகி வருவதைப் பற்றியும் தென்னகத்தைப் புறக்கணிப்பதைப் பற்றியும் கூறினார்.

இதை நாம் மக்களிடம் கூற வேண்டும். இப்படியெல்லாம் நாம் கூறுவதால் நமக்கு ஆதரவு பெருகுகிறது. அதனால் அவர்களுக்கு ஆதரவு குறைகிறது. அதை வைத்து நம்மை திட்டுகிறார்கள்.

அவர்கள் நம்மைத் திட்டாது என்ன பேசுவார்கள் மேடை அமைத்து ஒலிபெருக்கி வைத்து மக்களிடம் எதைச் சொல்வார்கள் "அண்ணாதுரை, இப்படி, நெடுஞ்செழியன் இப்படி, சம்பத் இப்படி என்று கூறுவதை விட வேறு என்ன பேசமுடியும்

தண்டி யாத்திரையைப் பற்றிப் பேசு, . சிதம்பரம்பிள்ளை செக்கிழுத்ததைப் பற்றிக் கூறி, சிறையில் பட்ட கஷ்டத்தைப் பற்றி விளக்கு; - கொடிகாத்த குமரன் உயிர்நீத்ததைப் பற்றி விவிரித்து, ஜாலியன் வர்லா படுகொலையைப்பற்றி சொல்லி, நாடுவிடுதலைக்காகப் பாடுபட்டதைப்பற்றியும், அதனால் தடியடியும், துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளானதைப்பற்றியும் சொல்லி வெள்ளைக்காரன் இப்படியெல்லாம் துன்புறுத்தினான். அந்த இன்னல்களுக்கிடையேசுதந்திரம் பெற்றோம் என்று கூற முடியுமா அப்படிச் சொன்னால் கூட்டத்திலுள்ளவர்கள் கேட்கமாட்டார்களா. உன் ஆட்சியில் என்ன வாழ்கிறது. இப்போது அதை விட மோசமாக இருக்கிறதே என்று கூறமாட்டார்களா?

தொழிலாளர்களையும், பொது மக்களையும் வேட்டையாடி ரத்தம் சிந்த வைத்துக் கொடுமைப் புரிந்ததைக் கேட்கமாட்டார்களா. அதனால்தான் நம்மைத் திட்டுகிறார்கள்.

தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை, நான் எழுதியுள்ள புத்தகங்களைப் பற்றியே பேசுகிறார்கள். ஆனால் இவர்கள் ஏதாவது புத்தகம் எழுதி இருக்கிறார்களா, என்றால் அதுவும் கிடையாது. வீணாக நம்மீது அடுக்கு மொழி பேசுகிறார்கள், நாடகம் எழுதுகிறார்கள் என்று சொல்லி தூற்றுகிறார்கள். இப்படித் தூற்றுவதால் வளர்ந்து விடுவார்களா? நாம் அழிந்து விடுவோமா? என்னைத் தூற்றுகிறார்கள் என்றால் தூற்றட்டுமே!

ஆகவே இனிமேல் மாற்றார் தூற்றுவதைப்பற்றி நம்மேடைகளில் பேசாதீர்கள் அதுவும் என்னைவைத்துப் பேசாதீர்கள் இந்த கூட்டத்தில் கூடியிருக்கும் கூட்டத்தைப்பாருங்கள். அதிலும் தாய்மார்கள் கூடியிருப்பதையும் பாருங்கள் இவர்களுக்கு நாம் நமது லட்சியங்களை கோரிக்கைகளைப்பற்றி கூற வேண்டாமா, நான் இந்தக் கூட்டத்தைக் கடந்து வரும்போது மிகக் கஷ்டத்துடன் வந்தேன்.

அவர்கள் தூற்றுதலுக்கு மதிப்பளிப்பவர்களாக இருந்தால் இவ்வளவு கூட்டம் வந்திருக்குமா இதை நீங்கள் சிந்திக்க வேண்டும்

மற்றும் நமது கூட்டங்களுக்கு ஒரு மைல் நடந்து வருகிறார்கள் பட்டி தொட்டிகளெல்லாம் நமது கழகம் வளர்ந்து வருகிறது. ஆகவே தூற்றுபவர்கள் தூற்றிக் கொண்டிருக்கட்டும்

நான் பல கூட்டங்களில் பேசியது போன்று பெரியார் அவர்களைப் பேசியதை விடவா நம்மை தூற்றிப் பேசப்போகிறார்கள். நான் நினைக்கிறேன் திருப்பூர் என்று, அங்கு ஒரு கூட்டம் நடந்தது அப்போது சுயமரியாதைப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த நேரம் அதோடு பெரியார் ரஷ்யா சென்று வந்து பொதுவுடைமைப் பிரச்சாரம் செய்து வருகிறார். அந்தக் கூட்டத்தில் பொதுவுடமையைப்பற்றி பெரியார் பெசிக்கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்திற்கு பெரியார் அவர்கள் தமது துணைவியார் நாகம்மையாரையும் அழைத்துச் சென்றிருந்தார். அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு காங்கிரஸ்காரர் ஒருவர் பெரியாரைப் பார்த்து "நீங்கள் பொதுவுடமை பேசுகிறீர்களே அதோ அங்கே இருக்கிறார்களே அவர்களும் பொதுவுடமையா" என்று நாகம்மையாரைக் காட்டிகேட்டார் உடனே பெரியார் ஆத்திரப்படாமல் அவர்கள்பொதுவுடமை என்று நினைத்தால் அங்கு போய்பார். அவர்கள் கொடுப்பதை வாங்கிக்கொள்" என்று சொன்னார்.

இந்த விஷயம் இதோ இங்கு குறிப்பெடுத்துக் கொண்டிருக்கும் சங்கரய்யாவுக்குத் தெரியும் பெரியாருடன் கூட இருந்து அவரோடு பணியாற்றியவர்.

ஆகவே இப்படிப்பட்ட இழிவான சொற்களையெல்லாம் கேட்டு பெரியார் ஆத்திரப்படாதிருந்தார். அவர் வழி வந்த நாம் ஏன் ஆத்திரப்பட வேண்டும். ஆகவே இனிமேலாவது நமது தோழர்கள் மக்களுக்கு நாட்டில் நடைபெறும் பல விஷயங்களை எடுத்து விளக்க வேண்டும்.

மற்றும் இங்கு பேசிய பல தோழர்களை நான் பேசப் போவதால் விரைவில் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கூறி முடிக்கச் சொன்னார்கள். தவறு பல தோழர்களையும், பல கருத்துக்களைப் பேச வைக்க வேண்டும். நமது நண்பர் கல்யாண சுந்தரம் பேசும் போது, நல்ல விஷயங்களைப் பேசினார். அதற்குள் முடித்துவிடச் செய்து விட்டீர்கள் ஆகவே அவரை மீண்டும் பேசும்படி சொல்லப் போகிறேன்.

நீங்கள் பொறுமையுடனிருந்து கேட்க வேண்டும்

(மீண்டும் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் பேசினார். அதற்குப்பின் அண்ணா அவர்கள் மீண்டும் பேசினார்)

நண்பர்களே!

நான் சொல்லியபடி நமது நண்பர் கல்யாணசுந்தரம் நல்ல கருத்துக்களைப் பேசினார் பாராளுமன்றத்திலிருந்து மாநில சட்டமன்றம் வரை, தென்னகத்தின் தொழில் வளங்கள் பற்றியும் வடநாட்டு தொழில் வளங்கள் பற்றியும் பேசினார்.

-டெல்லி அரசின் பாராபட்சத்தைப் பற்றியும் மிக விளக்கமாகப் பேசினார்

இதை நீங்கள் கேட்பதற்கு கான் வாய்ப்பை இழந்திருப்பீர்கள்.

இன்று நாம் தனி அரசைப் பெற்று, அரசு ஏறி ஆட்சிபுரிய வேண்டுமென்று எண்ணியுள்ள எண்ணத்தை — ஆர்வத்தை யாவரும் அறிந்து கொள்ளும் நிலை வந்து விட்டது. அந்த ஆர்வத்தை அழிக்க பலர் முயற்சித்து வருகிறார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

நாம் செய்ய வேண்டிய பணி பலவுண்டு! அதைச் செய்திட முன் வாருங்கள்!

கழகத் தோழர்களுக்கு அண்ணா விடுக்கும் அன்பழைப்பு!

(அண்ணா பேச்சு)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நமது மூலாதாரக் கொள்கையான "திராவிட நாடு திராவிடர்க்கே" என்ற மூலமந்திரம் எங்கும் பரவிவிட்டது.

நமது வளர்ச்சியைப் பார்த்து பலர் பயப்படுகிறார்கள். நாம் திராவிடநாடு கேட்பதை பல கட்சிகள் கண்டிக்க ஆரம்பித்து விட்டது

இந்த நாட்டிலுள்ள மற்ற கட்சிகள் எல்லாம் இந்தியா ஒரே நாடு என்கிறது.

காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் மற்ற கட்சிகளும் அகில இந்தியாவைப் போதிக்கிறது நாம் மட்டும் இந்தியா ஒரே நாடு என்பதை ஒப்புக் கொள்ளவில்லை

அடிப்படையில் நமக்கும் அவர்களுக்கும் பேதம் இருந்து வருகிறது

நாம் இந்தியா ஒரே நாடாக இருந்ததில்லை என்று கூறுகிறோம் நாம் தனித்து வாழ்வதற்கான பல காரணங்களைக் கூறுகிறோம், நாம் சரித்திரச் சான்றுகளைக் காண்பிக்கிறோம், பூகோளத்தை காட்டுகிறோம்

இந்தியா என்றும் ஒன்றாக இருந்ததில்லை என்று நாம் கூறி வருகிறோம்

நம்நாடு இன்று பலவகையில் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. நம்மை வடநாட்டு ஆட்சியினர் அலட்சியம் செய்து வருகிறார்கள்.

தொழிற் துறையில் நம்மைப் புறக்கணித்து வருகிறார்கள்

ஆகவே நாம் வடவர் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று கூறுகிறோம்

நமது மாநில முதலமைச்சர் காமராசர் ஒரு அருமையான கண்டு பிடிப்பை கண்டு பிடித்து விட்டார். இதை அவராகக் பிடித்ததோ, அல்லது வேறு யாராவது சொல்லிக் கொடுத்துக் கூறுகின்றாரோ தெரியவில்லை.

திராவிட நாடு பிரிய வேண்டுமென்று கேட்பது சொந்த சரக்கல்ல வென்றும், இலவச சரக்கென்றும், அது பெரியாரால் சொல்லப்பட்ட தென்றும் அவர் அதை இப்போது விட்டு விட்டாரென்றும் ஆனால் நாம் அதைக் காப்பியடித்துக் கேட்கிறோம்என்று கூறுகிறார்.

நான் அதைப் ஒப்புக் கொள்கிறேன் பெரியார் சொல்லியது தான் திராவிட நாடு — அவர் கேட்டது தான் திராவிடநாடு ஆனால் எங்களையெல்லாம் வைத்துக் கொண்டு தான் அவர் திராவிடநாடு கேட்டார்—நாங்களெல்லாம் சேர்ந்துதான் கேட்டோம்.

இன்று அவர் விட்டுவிட்டார், ஆனால் நாங்கள் அதைவிடாது அதை எங்கள் லட்சிய கீதமாக வைத்துக் கேட்கிறோம் அது எங்கள் சொந்த சரக்கு. இரவல் சரக்கு என்று ஏமாந்து கூறுகிறார் காமராசர்.

நமது நண்பர் அன்புரோஸ் பேசுகையில் டில்லியிலிருந்து வெளிவரும் ஒரு ஆங்கிலப்பத்திரிகை "நாம் திராவிடநாடு கேட்பதைக் கண்டித்திருப்பதாகவும், அதோடு தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவதை கவனிக்க வேண்டியிருந்தாலும் திராவிட நாடு பிரிய வேண்டுமென்று சொல்லுவது ஆபத்தானது. அதைக் கேட்பவர்கள் ஆபத்தானவர்கள்என்று எழுதியிருப்பதாகச் சொன்னார்

நான் அதை ஒப்புக் கொள்கிறேன். நாங்கள் ஆபத்தானவர்கள் தான். எங்களால் நிச்சயமாக ஆபத்துத்தான் வரும் யாருக்கு ஆபத்து அதைத்தான் நாம் யோசிக்க வேண்டும்

இந்த நாட்டைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் கொடியவர்களுக்கு, தூங்குகின்றவர்கள் தொடையில கயிறு திரித்து வாழும் கயவர்களுக்கு, வட்டி வாங்கி இங்குள்ள மக்களை ஏமாளிகளாக்கி ஏமாற்றி வரும் எத்தர்களுக்கு, எதேச்சாதிகாரத் திமிர் பிடித்துத் திரியும் தியவர்களுக்கு நாம் ஆபத்தானவர்கள தான்,

இந்த நாட்டை வேட்டைக்காடாக்கி அடிமைப் பட(டு)த்திவரும் அற்பர்களுக்கு ஆபத்தானவர்கள் தான்

இந்த நாட்டில் உழைக்காது ஊரார் அடுப்பில் உலைவைக்கும் உன்மத்தர்களுக்கு ஆபத்தானவர்கள் தான்

நான் இங்கே என் எதிரில் உட்கார்ந்திருக்கும் தாய்மார்களைப் பார்க்கிறேன். அவர்களிடம் 100 ரூபாய் அதுவுமில்லாது பெறுமானமுள்ள தங்க நகைகளாவது இருக்குமா என்பது சந்தேகம். அதுவுமில்லாது வெறும் உடம்போடு இருப்பவர்களையும் காண்கிறேன்.

அவர்களிடம் இருப்பதெல்லாம் தாங்கள் பெற்றெடுத்த தங்கங்கள் இருக்கின்றன அவர்கள பார்ப்பதெல்லாம் அந்த செல்வங்களின் சிரிப்பால் தெரியும் முத்துப்பற்களைத்தான் பார்க்கிறார்கள்.

ஏன் இந்த நிலை இங்கே தங்கம் தோண்டி எடுக்கப் படுகிறது எவ்விதமான வளங்கள் இருந்தும் இந்த அவல நிலை ஏற்படக் காரணம் என்ன

இவர்களுக்கு குடியிருக்க இடமில்லை வயிறார உண்ண உணவில்லை இதற்குக் காரணம் என்ன இவர்களுக்குத் தெய்வ நம்பிக்கை இல்லையா இவர்கள் விரதமிருக்காத நாட்கள் இருக்கிறதா தொழாத தெய்வங்கள் இருக்கிறதா வெங்கிடேஸ்வரர் திருமணத்தை பற்றிய சினிமா படத்தைக் கூட பக்தியோடு பார்க்கிறார்களே இருந்தும் இப்படி இருக்கிறார்கள் என்றால் இங்கு நல்லதுரைத்தனம் இல்லை

நண்பர் கல்யாணசுந்தரம் பேசும் போது கூறினார் நமது வாலிபர்களுக்குப் பலமில்லை நிற்பதற்குக்கூட முடியாது துவண்டு விடுகிறார்கள் அரை மணி நேரம் டஸ்ஸில் நிற்பதற்குள் பஸ்ஸில் உட்கார்ந்திருப்பவர்கள். மீது சாய்ந்து விடுகிறார்கள் என்று சரியான உணவு இருந்தால் தானே தெம்பு ஏற்படும்,

நான் இங்கு பார்க்கிறேனே உட்கார்ந்திருந்திருப்பவர்கள் நிலையை காலில் பலமில்லாது 5 நிமிடத்திற்கொரு முறை மாறி, மாறி உட்கார்ந்து கொண்டு காலை மடக்கிக் கொண்டும் நீட்டிக் கொண்டு மிருக்கிறார்களே.

இதற்கு காரணம் நல்லரசு இங்கில்லை, தென்னாடு தேய்ந்து வருகிறது, இங்கு எல்லா வளமிருந்து மக்கள் அனுபவிக்க முடியவில்லை, ஆகவே நமது திராவிடம் பிரிந்தால் தான், நம்முடைய அரசு நமக்குக் கிடைத்தால் தான் நமது நாடும், நமது மக்களும் நல்வாழ்வடைய முடியும்.

இங்குள்ள நமது மாநில அமைச்சர்களுககுத் தன்மானமிலலாது வடவரின் கையாட்களாக இருந்து வருகிறார்கள் நமது நாட்டின் தேவைகளை கவனிப்பவர்களாக இல்லை, நாட்டுப் பற்றில்லை! அப்படிப் பட்டவர்களால் என்ன நன்மை ஏற்படும்,

பொது மக்களின் உணவு விஷயத்திற்குக் கூட வடக்கே உத்திரவு வாங்க வேண்டியிருக்கிறது. இங்கு அதற்கென்று ஒரு அமைசசர் இருந்து வருகிறார், இருந்தும் அதிகாரமற்று இருக்கிறார். நம்முடைய தொழிலாளர்கள் படும் தொல்லைகள் தாங்க முடியாத நிலையில் இருந்து வருகிறது. அதைப் போக்க நமது மாநில தொழில் மந்திரியால் முடியவில்லை. அவருக்கு அதற்கான அதிகாரமுமில்லை!

தென்னகத்தின் வளர்ச்சியில்—தென்னக மக்களின் நல்வாழ்வில இந்த மாநில சர்க்காருக்கு அக்கறையில்லை. அவர்கள் தங்களது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவே முற்படுகிறார்கள் என்பதை நாம் பல ஆதாரங்களோடு கூறுகிறோம். அவர்களுக்கு டில்லியோடு சண்டை போட்டு நமது உரிமையைப் பெற திறமை இல்லை என்று கூறுகிறோம்! இதற்குப் பதில் கூறாது, அவன், நெட்டை இவன் குட்டை என்று கூறுவதால் நன்மை ஏற்பட்டு விடாது.

நாம் நாடு பிரிய வேண்டுமென்று கூறும் காரணங்களுக்கு பதில் சொல்ல முடியாது பதவிக்காக இப்படிக் கேட்கிறோம் என்று மாற்றா சொல்லுகிறார்கள்.

நான் உறுதியாகக் கூறுகிறேன். இங்கு யார் வேண்டுமானாலும் ஆளட்டும் அது பற்றி எனக்குக் கவலையில்லை. அரசு நமதாக வேண்டும். எனக்குப் பதவியைப் பற்றிக கவலையில்லை பறிபோன பார் நமக்குக் கிடைக்க வேண்டும் பதவி எங்களுக்கு வேண்டாம்

இழந்த நம் நாட்டை மீட்கச் செய்யும் பணிகளுக்கு இடையூறாக இருக்காதீர்கள். எதிரிகளின் கையாட்களாக திகழாதீர்கள் யார் தடுத்தாலும், யார் எதிர்த்தாலும் இந்த நாடு விடுதலை அடைவது நிச்சயம்.

உங்களை எதிர்கால இளைஞர்கள் இகழ்வார்கள். துரோகிகளெனத் தூற்றுவார்கள். இப்படிப்பட்ட துரோகம் செய்தவர்கள் நாட்டு மக்களால் இகழப்பட்டிருக்கிறார்கள். தூற்றப்பட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் வரையப் படும் வரலாற்றில் உங்கள் பெயர் துரோகப் பட்டியலில் இடம் பெறும். இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாடு பிரிந்தால் வாழ முடியுமா? தனித்து இருப்பதற்கான வளமிருக்கிறதா? என்று சிலர் நினைக்கிறார்கள். 3 பக்கமும் கடல் நிறைந்து கப்பல் மூலமே வாணிபம் புரிந்திருக்கிறோம்.

கோலாரில் தங்க மெடுக்கப் படுகிறது. எந்த நாட்டிற்கும் இல்லா வளம் நிறைந்திருக்கிறது, இங்கிருந்து, பல பொருள்களை மேல் நாட்டுக்கனுப்பி கடல் மூலம் வியாபாரததைப் பெருக்கி யிருக்கிறோம்!

(9ம் பக்கம் பார்க்க)

அண்ணாவின் காலத்திலேயே திராவிட நாட்டைப் பெறுவோம்!

யார் தடுத்தாலும் நின்று விடாது!

கோட்டான்கள் கத்துவதைக் கண்டு குயில்களாகிய நாமும் கூவுவதா?

டி. கே. சீனிவாசன் சொற்பொழிவு.

மைலாப்பூர் பகுதியைச் சார்ந்த 84வது வட்டம் அறிவு வளர்ச்சி மன்றத்தின் மூன்றும் ஆண்டுவிழா, தோழர் சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் தலுக்கானம், சே. கோவிந்தசாமி, மைலை கபாலி நகரமன்ற உறுப்பினர்களும், ஆகிய கிருஷ்ணன், ஆறுமுகம், நாகப்பன், ஆனந்தன், ஆகியவர்களும், கழக வளர்ச்சி பற்றியும். நகரமன்றத்தில் கழகத் தோழர்கள் செய்த பணிகளைப் பற்றியும், நகரமன்ற வரவு செலவு திட்டத்தைப் பற்றியும், கழகத்தைப் பற்றியும், தலைவர்களைப் பற்றியும் எதிர்கட்சி மேடைகளில் தாக்குவதற்குப் பதலளித்தும் பேசினார்கள்.

பின்னர் திரு. டி. கே. சீனிவாசன் அவர்கள் பலத்த கை ஒலிகளுடன் பேசியதாவது:

அன்புள்ள தலைவர் அவர்களே! நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

இந்த மாபெரும் கூட்டத்தில் பேசும் வாய்ப்பளித்த நமது நண்பர்கட்கு எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

எனக்கு முன் பேசிய நண்பர்கள் காங்கிரஸ் கட்சியினரும், திராவிடர் கழகத்தாரும் இங்கு நமது கழகத்தைப் பற்றியும், நமது தலைவர்களைப் பற்றியும் ஆபாசமாகத் தாக்கிப் பேசியதற்காக மிக ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் பதலளித்தார்கள்.

இதற்காக நான் வருந்துகிறேன்! அவர்கள் தாக்குகிறார்கள் என்பதற்காக நாம் ஆத்திரப்படக் கூடாது! அதைப் பற்றிக் கவலைப்படக் கூடாது!

நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும், நமது பொதுச் செயலாளரும் கூறுவது போன்று அவர்கள் நம்மை ஆபாசமாகப் பேசுவதாலோ, இழிவாகத் தாக்குவதாலோ நாம் அழிந்து விட மாட்டோம், நாம் மறைந்து விடமாட்டோம்! அவர்கள் இழித்துப் பேசப் பேச, ஆபாசமாகத் தாக்கத் தாக்க நாம் மறைந்து விட மாட்டோம். அதற்கு மாறாக வளர்ந்தே வருகிறோம், மக்களிடம் நாம் செல்வாக்கு அடைந்தே வருகிறோம்.

நமது பொதுச் செயலாளர் கூறுவது போன்று பந்து உதைக்க; உதைக்க உயர்வது போன்று, சந்தனம் அரைக்க, அரைக்க மணப்பது போன்று நாம் நம் மாற்றார் தூற்றத் தூற்ற யாரும் கண்டு திகைக்கும் வண்ணம் உயர்ந்து விட்டோம். அவர்களுக்கு பதிலளித்து நமது நேரத்தை வீணாக்கக் கூடாது.

திராவிடர் கழகமும், காங்கிரசும் தாக்குகிறது. ஆபாசச் சொற்கள் வீசுகிறது என்று நமது நண்பர்கள் சொன்னார்கள்.

காங்கிரஸ் நம்மைத் தூற்றுவதைவிட அதற்கு வேறு என்ன வேலை இருக்கிறது. இன்று காங்கிரசின் மீதும், அதன் ஆட்சியின் மீதும் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை மாற்றிக் கொண்டார்கள். மக்கள் இன்று அடைந்து வரும் தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும் காங்கிரசும், அரசினருமே காரணம் என உணர்ந்து விட்டனர். அவர்கள் ஆட்சியை மாற்ற வேண்டும் என்று மக்கள் நினைத்து நம்மை ஆதரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் நாம் வளர்கிறோம், அவர்கள் செல்வாக்கிழந்து வீழ்கிறார்கள். அதனால் நம்மீது பாய்கிறார்கள். காங்கிரஸ் தலைவர் முதல்— அமைச்சர்களும், சாதாரண காங்கிரஸ் தொண்டர்களும் தவறான மொழியில் தாக்குகிறார்கள் அதைக் கண்டு நாம் ஏன் கவலைப்பட வேண்டும், தாக்கும் வரை தாக்கட்டும், தூற்றும் வரை தூற்றட்டும்,

திராவிடர் கழகம் தாக்குகிறதென்று நண்பர்கள் வருந்தினார்கள், இதில் என்ன ஆச்சரியம்.

அது என்று நம்மைத் தாக்காதிருந்தது நாம் என்று பிரிந்தோமோ அன்றிலிருந்து நம்மைத் தாக்குவது தானே திராவிடர் கழகத்தாரின் முக்கிய வேலை. நாம் என்றுமே அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லையே. அவர்கள் தாக்குவதால் நமக்கென்ன கேடு விளையப் போகிறது. அவர்களுக்கு நாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை,

கோட்டான் கத்துகிறதென்று குயிலும் கூவுவதா?

கோட்டான் கத்துவதற்கு யாருமே கவலைப்படமாட்டார்கள்.

நம்முடைய தரமென்ன? நாம் அடைந்துள்ள நிலை என்ன நாம் போய் அவர்களுக்குப் பதில் கூறுவதென்றால், மக்கள் நம்மையும் அவர்கள் நிலைக்கே மதிப்பிட ஆரம்பித்து விடுவார்கள்.

நமது அண்ணா அவர்கள் நமக்கு எடுத்துரைத்து வருவதை நாம் மறந்து விடக்கூடாது.

அவர் கூறுகிறார்?

"யார் ஒருவர் அதிகமாகத் தாக்கப்படுகிறார்களோ யார் ஒருவர் அதிகமாகத் தூற்றப்படுகிறார்களோ அவர்கள் வளர்வார்கள். பொதுமக்களின் அன்பைப் பெறுவார்கள்" என்று.

இதை நாம் மறந்து விடக் கூடாது.

நம்முடைய திட்டங்களைப் பற்றியோ, நமது கொள்கைகளைப் பற்றியோ நாம் செய்துள்ள வேலைகளைபற்றியோ இதுவரை குறை கூறவில்லை அப்படிக் குறை கூறினால் நாம் அவர்களை வரவேற்போம். பொறாமையிலும், கெட்ட எண்ணத்தாலும் குறை கூறுபவர்களைப் பற்றி நாம் ஏன் கவலைப் பட வேண்டும்!

இன்று திராவிடர் கழகத்தில் திறமையுள்ளவர்கள் நல்லெண்ணம் படைத்தவர்கள், கொள்கைப் பற்றுள்ளவர்கள், தியாக மனம் படைத்தவர்கள் இல்லை!

அன்று பெரியார், அதிகாரத்தை வலிவுடன் நடத்திய ஓமந்தூராரை எதர்த்தார். குமாரசாமி ராஜாவை எதிர்த்தார் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரை எதிர்ததார்! காங்கிரசை எதிர்த்தார்! அன்று அவர் பக்கத்தில் நாம் இருந்தோம்!

அவருக்குத் தெரியும் நாம் எப்படிப் பட்டவர்களென்று.

இன்று இருப்பவர்கள் ஓட்டைகளும், ஒடைசல்களும், செம்புப் பித்தளைகளும் இருக்கிறது. அவர்களை வைத்து அவரால் என்ன செய்ய முடியும். நம்மைத் தூற்றுவதைவிட வேறு யாரிடம் அவர்கள் போக முடியும்.

நாம் அன்று பெரியாரின் அருகில் இருந்தோம்! அன்று அவருக்குத் தெம்பிருந்தது, வீரமிருந்தது, தைரியமிருந்தது! எவரையும் எதிர்த்தார்!

இன்று நாம் அவர் பக்கத்திலில்லை அதனால் அவருக்குத் தெம்பில்லை, வீரமில்லை. தைரியமில்லை! கொள்கைகளையும் வலியுறுத்த முடியாது. விட்டுக் கொடுத்துக் கொண்டு எதிரிகளைப் புகழ்ந்து கொண்டு வருகிறார்,

கொள்கைகளை நாட்டு மக்களிடம் பரப்பி வந்த அவர், இன்று அதைக் கைவிட்டு விட்டு யார், யாருக்கோ வக்காலத்துப் பேசும் நிலைக்கு வந்து விட்டது.

'கதர் மூட நம்பிக்லக' என்று மக்களிடம் பேசி வந்து, காங்கிரஸ் ஆட்சியைத் தாக்கி வந்த பெரியார் இன்று காங்கிரஸ் ஆட்சிக்குப்பக்கபலமாக இருந்து வருகிறார்.

ஒரு காலத்தில் காங்கிரசிலிருந்து கதர் மூட்டையைத் தோளில் போட்டுக் கொண்டு ஊர் ஊராக காங்கிரஸ் பிரச்சாரம் செய்தார். தனது தோட்டத்திலிருந்த தென்ன மரங்களையெல்லாம் வெட்டி கீழே சாய்த்து விட்டு மது விலக்குப் பிரச்சாரம் செய்தார். அதே காங்கிரஸ் தவறான போக்கில் போகிறதென்பதைக் கண்டதும் அதை எதிர்த்தார். அதை ஒழிப்பேன் என்றார். அன்று நாமும் அவருடனிருந்தோம் நமது அண்ணா அவர்களும் அருகில் இருந்தார்.

இன்றோ, எந்தக் காங்கிரசை எதிர்த்தாரோ, எந்த காங்கிரஸ் மந்திரிகளை எதிர்தாரோ அதே பெரியார் காமராசரையும், காமராசர் சர்க்காரையும் காப்பாற்றுவேன் என்கிறார், ஏன் இந்த நிலை. இன்று அவர் பக்கத்தில் உரம் வாய்ந்த நல்லவர்கள் இல்லை அவரும் அதைத் தெரிந்து மாற்றிக் கொள்கிறார்; அதனால் நாம் ஏன் கவலைப்பட வேண்டும்!

ஒரு குரங்கை எந்த இடத்தில் கொண்டு போய் விடுகிறோமோ அங்கு இருப்பதை நாசம் செய்யும் சாக்கடைப் பக்கத்தில் கொண்டு போய் விட்டால் சேற்றைப் பூசிக் கொள்ளும். மலர் தோட்டத்தில் விட்டால் மலர் செடிகளை நாசம் செய்து விடும் அதே போல் இன்று திராவிடர் கழகம் சாக்கடை போன்றிருக்கிறது. சேற்றைப் பூசிக் கொள்ளாது பின் என்ன செய்வார்கள்.

திராவிடர் கழகத்தின் ஜாதகம் நம்மிடம் இருக்கிறது! பழைய ஜாதகத்தைப் புரட்டி பார்த்தாலே அதைப் புரிந்து கொள்ளலாம்.

அப்படிக் கூறுவது நமது பண்பல்ல அவர்கள் தாக்கினாலும் அவர்களைத் தாக்கக் கூடாது.

பல நாட்டுச் சரித்திரத்தைப் பார்த்தாலேயே நன்கு இதைப் புரிந்து கொள்ளலாம். பிரான்சு நாட்டில் விடுதலைக்காக பாடுப் பட்டவர்களை தாக்கியவர்களின் கதி என்ன வாயிற்று என்பதையும் நம்மைத் தாக்கியவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த மன்றத்தாரை நான் மிகவும் வேண்டிக் கொள்வது என்னவென்றால் மற்றவர்கள் தாக்குகிறார்கள் என்பதற்குக் கவலைப்படுக் கொண்டிருக்கக் கூடாது, எனக்கு முன் பேசிய நண்டர் ஒருவர் இங்கு விறகு வெட்டும் தொழிலாளர்களின் குறைகளைப் பற்றியும், அவர்கள் படும் இன்னல்களைப் பற்றியும், பேசினார். அதைப் போக்குவதற்கான வகையில் நாம் பாடுபட வேண்டும் அந்தத் தொழி

(6ம் பக்கம் பார்க்க)

நமது லட்சியமோ பெரிது அது நிறைவேற தியாகம் செய்ய வாரீர்!

(சீனிவாசன் பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர்களை ஒன்றுபடுத்தி ஒரு அமைப்பை நிறுவி அவர்களை ஒற்றுமைப்படுத்தும் பணியில் நமது சமூகம் பாடுபடவேண்டும்.

மற்றும் இங்குள்ள ஏழை மக்களின் தொல்லைகளைப் பற்றியும் நமது நண்பர்கள் பேசினார்கள். அதைக் களையும் வேலையில் ஈடுபடப் போவதாக இந்த வட்டத்துச் செயலாளர் கூறினார். இதைக் கேட்டு நான் மகிழ்ச்சி கொள்கிறேன். நாம் பொது மக்களிடம் தொடர்பு கொண்டு பணியாற்றினால் நம்மைத் தூற்றுவோர்களின் நிலை என்னவாகும்.

இன்று நாம் சென்னை மாநகராட்சி மன்றத்தைக் கைப்பற்றி நிர்வாகப் பெற்றிருக்கிறோம், அதைக் கண்டு பலர் பொறாமை கொண்டு பலவித தவறான வார்த்தைகளைக் கூறி தாக்குகிறார்கள்.

நகரம் நாற்றமெடுக்கிறதென்றும், நிர்வாகம் ஊழலாகி இருக்கிறதென்றும் கூறுகிறார்கள்.

நாம் நிர்வாகப் பொறுப்பேற்று ஓராண்டுதான் ஆகின்றது.

இந்தக் குறுகிய காலத்தில் நகரத்தின் நன்மைக்கான பல பணிகள் செய்திருக்கிறோம். நகரத்தில் ஏழைகளுக்குக் கொடுத்து வந்த தொல்லைகளைக் களைந்திருக்கிறோம்.

மாநகராட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் நமது தோழர்கள் தீட்டியிருக்கும் வரவு செலவுத் திட்டத்தை அரசியல் அறிவு படைத்த பலர் பாராட்டியிருக்கிறார்கள். நம்மைத் தாக்கி வரும் பல பத்திரிகைகளே பாராட்டி எழுதியிருக்கின்றன.

நமக்கு முன் பொறுப்பிலிருந்த ஆளுங்கட்சியினர் பணக்காரர்களுக்கு சலுகை காட்டியும், ஏழைகளுக்கு பாதகங்கள் செய்தும் வந்ததைப் போக்கி, பணக்காரர்களுக்குக் கொடுத்திருந்த சலுகையை நீக்கி, அவர்களுக்கு விதிக்க வேண்டிய வரிகளை விதித்து ஏழைகளுக்கு செய்ய வேண்டிய சலுகைச் செய்துமிருக்கிறோம். இப்படிச் செய்த நம்மை சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் அரைச்சர் என்று கூறியிருக்கிறார். அரசியலை விளையாட்டுக்காக உபயோகித்து வரும் "ஹாபி பாலிட்டீசன்" தான் நம்மைப் பார்த்து இப்படிக் கூறியிருக்கிறார்,

அவர் கூறியிருப்பதற்கு நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தக்க பதில் கூறிவிட்டார்.

இருப்பினும் அவருக்கு நான் ஒன்று கூற ஆசைப்படுகிறேன்.

சென்னை மாநகராட்சி மன்றத்தின் ஆட்சியை பல ஆண்டுகள் நிர்வகித்த வந்த உங்கள் கட்சியினர் செய்ததைவிட எங்கள் கட்சியினர் இந்த குறுகிய காலத்தில் என்ன செய்திருக்கிறோம் என்று பொது மக்கள் உணர்ந்து வருகிறார்கள், அடுத்த தேர்தலில் இப்போது இருப்பதைவிட அதிகமான பேர் வரத்தான் போகிறோம். பொறுத்திருந்து பாரும் என்று கூறிக்கொள்கிறேன்.

நமது மாநில அமைச்சர்களான காமராசரும். கக்கனும் நிதியமைச்சர் சுப்பிரமணியமும் நமது கழகத்தை கண்டபடி தாக்கி வருகிறார்கள். ஆனால் இப்போது புதிதாக போக்குவரத்து மந்திரி ராமய்யாவும் தாக்க ஆரம்பித்து விட்டார தாக்கும் வரை தாக்கட்டும்.

நமது லட்சியம் பெரிது. அதை நிறைவேற்ற நாம் செய்ய வேண்டிய பணிகளே மிகப் பெரிது. அதற்காக நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டும். இதை விட்டு மாற்றார் தாக்குவதைப் பற்றி கவலைப்படுவது சரியல்ல.

நாட்டில் புரட்சியைஉண்டாக்கிய ரூசோ, வால் டையர், லெனின் போன்ற தலைவர்கள் செய்த அரும் பணிகளைப் பின்பற்றியே நமது தலைவர் அண்ணா அவர்களும் இந்த நாட்டில் செய்து வருகிறார்.

இன்று டில்லி சர்க்கார் தென்னகத்துக்குச் செய்து வரும் தீங்குகளை எங்கும் கண்டித்து வருகிறார், ரங்கா, அனுமந்தய்யா, நிஜலிங்கப்பா போன்ற தலைவர்களும் கண்டிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

தூத்துக்குடி, பாண்டிச்சேரி, சிதம்பரம் போன்ற இடங்களில் உபத் தேர்தலில் நாம் தோற்றதைப் பற்றி நம்மை கேலி செய்கிறார்கள் நீ எப்படி தேர்தலில் வெற்றி பெற்றாய், யார். யார் காலிலெல்லாம் விழுந்தாய் என்பதோடு, உன்னிடமிருக்கும் அதிகாரத்தைப் பயனபடுத்தி, பணக்காரர்களை மிரட்டி அவர்களை உன்னுடன் சேர்த்து வெற்றி பெற்றாய்.

மற்றும் தூத்துக்குடியில் என்ன செய்தாய் சிந்தித்துப் பார்.

தூத்துக்குடி தரை முகத்தை விரிவுபடுத்தி, அங்குள்ள கடலை ஆழப்படுத்தி. பெரிய தொழிற் பகுதியாக ஆக்கப் போவதாக தேர்தலின் போது கூறி ஏமாற்றி ஓட்டுப் பெற்றாய்.

உனக்குத் தைரியமிருந்தால்— உனக்கு பலமிருக்கிறதென்றால் இனி வரும் தேர்தலில் மந்திரிகளை கலந்து கொள்ளாமல் செய்பின் நீ வெற்றி பெறுகிறாயா பார்!

மந்திரிகள் தேர்தல் பிரசாரத்திற்கு வருவதும் அவர்களைச் சுற்றி அதிகாரிகள் வருவதும். அந்த அதிகாரிகள் அமைச்சர்களின் தயவுக்காக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதும் அதனால் வெற்றி பெறுவதும் வெட்டகக் கேடான செயலாகும்.

நாம் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு சாதியை ஒழிக்க முற்டவில்லை என்று குற்றம் கூறுகிறார்கள், ஜாதி ஒழிப்பதற்கு நாம் விரோதிகளல்ல. பார்ப்பானை குத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

நாங்கள் சாதி ஒழிப்பதற்கு விரோதிகளல்ல. பார்ப்பானை குத்தி விட்டால் சாதி ஒழிந்து விடுமா? முதலியார் சாதிப் பிரிவுடன் இருக்கிறாரே, செட்டியார் சாதிப்பிரிவுடன் இருக்கிறாரே, நாயுடு சாதிப் பிரிவைப் புகட்டுகிறாரே அவர்களை கொல்ல வேண்டுமென்று சொன்னாயா?

நாங்கள் சாதிப் பிரிவினையைக் காட்டி மக்களிடம் பிரிவினை மனப்பான்மையை வளர்த்து வரும் எல்லோரையும் கண்டிக்கிறோம்.

இன்று தென்னகத்தில் தொழில் வளம் இன்றி மக்கள் பிச்சை யெடுக்கும் நிலை வந்து வெளி நாடுகளுக்குப் போய் பிழைக்கும் நிலை ஏற்பட்டு. அங்கும் பிழைக்க முடியாது தவிக்கும் நிலை அடைகிறார்கள்.

தென்னாட்டை வடவருக்குக் காட்டிக் கொடுத்து, பதவியிலிருந்தால்போதுமென்றுநினைக்கும் துரோகிகள் பலர் மலிந்து விட்டார்கள்.

நாம் திராவிட நாடு பிரிய வேண்டுமென்று கூறி வருவதை கேலி செய்து இது கற்பனை என்கிறார்கள். நான் அவர்களுக்குக் கூறுகிறேன். நாங்கள் கோறும் திராவிட நாடு தவறானது என்பதற்கு ஆதாரம் கூறு, நாங்கள் பல ஆதாரங்களைக் காட்டி யிருக்கிறோம்! அதை யெல்லாம் மறுத்துப் பேசு! அதற்கு வக்கில்லாது எங்களுக்கு ஆதாரங்கள் இல்லை என்று கூறிக் கொண்டு ஏசித் திரியாதே.

எங்களுக்குக் கிடைத்திருக்கும் தலைவர் எங்கள் அண்ணா அவர்கள் மக்களின் உள்ளன்பைப் பெற்றவர்.

மக்களின் வாழ்க்கையை வளம் பெறச் செய்ய வந்தவர் இழந்த ஆட்சியைப் பெற அரும் பெரும் பணிகளைச் செய்து வருபவர் அப்படிப்பட்ட—எந்தக் கட்சியிலுமில்லாத —எவருக்கும் கிட்டாத தலைவர் எங்களுக் கிடைத்திருக்கிறார். அவருக்கு இயற்கையாகவே இருக்கும் பண்பாலும், அன்பாலும், பாசத்தாலும் மக்களைத் திரட்டி வருகிறார்.

அவரது ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்க மக்கள் திரண்டு விட்டார்கள். இன உணர்ச்சி பெறுகிவிட்டது, எங்கள் நாட்டை எங்கள் அண்ணாவின் காலத்திலேயே பெறுவோம்

எங்கள் கழகம் நல்ல முறையில் வளர்ந்து வருகிறது பட்டி தொட்டிகளிலெல்லாம் எங்கள் கொள்கைகள் பரவி வருகிறது. இதைக் கண்டு மாற்றார் மருட்சியடைகிறார்கள்.

எனக்கு முன் பேசிய ஒரு நண்பர் கூறினார் மைல் கற்களில் இந்தி எழுத்துக்கள் எழுதுவதைப்பற்றி. இங்குள்ள நமது மாநில அமைச்சர்களுக்கு மொழிப்பற்றோ, நமது நாடு என்கிற உணர்ச்சியோ இல்லை. அவர்கள் இந்தி வெறியர்களின் அடிமைகளாக இருக்கிறார்கள். இன்று இந்தி ஆதிக்கம் வலுப்பெற்று வருகிறது, பண்டிதபந்த் எப்படியும் இந்திக்கு பெருமையைத் தேடித்தர வேலை செய்து வருகிறார். இந்த உணர்ச்சி நமது

(8-ம் பக்கம் பார்க்க)

இரண்டாவது இதழ் விற்பனையாகிறது!

முத்தமிழ்க் காவலர் விசுவநாதம், டாக்டர் மா. இராமாணிக்கனார், திருக்குறளார், மெ. திருமாறன் எழுதும் சிறப்புக் கட்டுரைகளுடன்- தேன் தமிழ்க் காவியமாய்-ஆராய்ச்சியின் விருந்தாய் - தமிழர் இல்லந் தோறும் தவழ வேண்டிய கருத்துச் செல்வமாய் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது மூன்றாவது "இதழ்" பேமலராக, சிறப்பான- கதை - கவிதை - கட்டுரைகளுடன், இருவண்ண முகப்போடு வெளிவரும்.

"தமிழர் நாடு"

ஆசிரியர்: நா. வா. கலைமணி.

வெள்ளி தோறும் வெளிவரும் 8 பக்கங்கள்

வார இதழ் தனிப்பிரதி 12 காசுகள்

விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும்

தமிழர் நாடு, 1/19, ஆலத்தூர் சுப்ரமணிய ஆச்சாரி தெரு சென்னை—7.

எங்களை அழிப்பதற்கு முன்பு நீங்களே அழிந்து விடுவீர்கள்!

பத்ரம்! ஜாக்ரதை! கவனமிருக்கட்டும்!

சஞ்சீவி ரெட்டிக்குத் தான் புரியவில்லை!

தோற்ற - தோற்கப் போகும்

இந்த அளகேசனுருக்குமா புரியவில்லை?

"திராவிட முன்னேற்றக் கழகம் கொசு போன்றது அதை கலபத்தில் நசுக்கி விடலாம்" என்று அகில இந்திய—இல்லை, அகில பாரத காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டி மதுரை மாநகரில் முழக்கம் செய்திருக்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகம் கொசுவா அல்லவா, அதை நசுக்க முடியுமா, முடியாத என்பதைப் பற்றி ஆராய்வதற்கு முன்பு திரு. சஞ்சீவி ரெட்டியை பற்றி கொஞ்சம் விமர்சனம் செய்யாமல் இருக்க முடியவில்லை!

திரு. சஞ்சீவி ரெட்டி ஆந்திரத்தின் முதலமைச்சராக பணி புரிந்த போது அவருக்கிருந்த நாட்டுப் பற்றும், இனப்பற்றும் இப்போது எங்கே ஓடி ஒளிந்து கொண்டன, ஏன் ஒளிந்து கொண்டன என்பதை, நாம் அவரைப் பார்த்துக் கேட்பதை விட அவரே அவரைக் கேட்டுக் கொள்வது தான் நலம் என்று கருதுகிறோம்!

திரு. சஞ்சீவி ரெட்டி முதலமைச்சராக இருந்த போது டில்லி ஏகாதிபத்தியத்தின் கொடுமையை எடுத்து, எடுத்து விளக்கினாரே அந்த விளக்கம் இன்று எங்கே போயிற்று! ஏன் போயிற்று!

தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது, தென்னகம் மதிக்கப்படவில்லை! தென்னாட்டில் எதும் வகையான, வளம் கூட்டும் தொழிற்சாலை இடையாது! இது அநீதியாகும், அக்கிரமச் செயலாகும்!" என்று வெற்றி முரசம் கொட்டிய வீரர் எங்கே?

"தென்னகம் வளம் பெற வேண்டுமானால், தென்னகத்திலுள்ள அனைவரும் ஒன்றுபட்டு வடவர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும்! தென்னகத்து மக்கள் ஒன்றுபட்டால் வடவர்கள் அஞ்சுவார்கள், பயப்படுவார்கள்" என்றெல்லாம் பேசி வந்தவர் இன்று பூனை போல் பதுங்கி. பதுங்கி தாசர்களுக்கு தாளம் போடுவது ஏன்? பதவி, பதவி எல்லாம் பதவிதான்!

அன்று. தென்னவர்களை ஒன்று சேர அழைப்பு விடுத்தார்! இன்று அது வகுப்பு துவேஷம் என்கிறார்!

சென்னை நகரசபை தினத்தில் திரு. சஞ்சிவி ரெட்டி முழங்கிய தென்ன? "தென்னகம் தனி பண்புடையது, தனி நாகரிகமுடையது. தனி கலாச்சாரமுடையது! தென் மாநிலங்கள் ஒன்றுபட்டால் மத்திய சர்க்காரை பணிய வைக்க முடியும்" என்று கூறியதெல்லாம் எங்கே?

சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் "டெல்லி வெகு தூரம் இருக்கிறது—நீங்கள் யார்? எங்களை விட உங்களுக்கு என்ன அக்கறை" என்று உணவு மண்டல கலைப்புப் பற்றி பேசி இனவுணர்வைக் காட்டிக் கொண்டார்!

இவர் தான் இப்போது கூறுகிறார் "திராவிட நாடு இலட்சியத்தை அடைய முடியாது" என்று!

இதை யார் நம்புவார்கள்? நேற்று ஒரு பேச்சு, இன்று ஒரு பேச்சு என்றால் மக்கள் எப்படி செவி சாய்ப்பார்கள்! "பதவிக்காக பேசும் பேச்சு" என்று மக்கள் ஒதுக்கித்தள்ளத்தானே செய்வார்கள்! பதவி போனால் மீண்டும் பழைய பல்லவி ஆரம்பமாகும், எனவே இதைப்பற்றி நாம் கவலைப்படப் போவதில்லை!

திரு. சஞ்சிவி ரெட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தை கொசு என்று கூறுகிறார், சுலபமாக நசுக்கிவிட முடியும் என்றும் நினைக்கிறார்!

பாவம்! திராவிட முன்னேற்றக்கழகச் சரித்திரத்தைப் படித்துப் பார்த்ததில்லை போலும்!

இன்றைய தினம் "காங்கிரஸ் கட்சியை ஒழிப்பேன்" என்று நாடெங்கும் முழக்கம் செய்து வரும் ஆச்சாரியார்- ஆச்சாரியார் என்றால் எப்படிப்பட்ட ஆச்சாரியார், காந்தியார் மகனுக்குப் பெண்ணைக் கொடுத்து காந்தியாரை சம்பந்தியாக்கிக் கொண்ட ஆச்சாரியார் இதையேத் தான் கூறினார்! சஞ்சிவி ரெட்டி இன்றைய தினம் எந்த வார்த்தையைக் கூறினாரோ அதைவிட அதிகமாகவே கூறி "தி. மு. கழகத்தை ஒழிப்பேன்" என்று சபதம் செய்தார்!

எந்த நேரத்தில் இந்த சபதத்தைச் செய்தார் தெரியுமா?

ஆட்சி பீடத்தில் அமர்ந்து, அதிகாரத்தையும் போலீஸ் படையையும் தன் கைக்குள் வைத்துக் கொண்டு மாநில மக்களை ஆட்டிப் படைக்கும் முதலமைச்சராக இருந்த காலத்தில் தான்—"திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கொசு, மூட்டை பூச்சி அதை கால் கட்டை விரலால் நசுக்கி விடுவேன்" என்று இடி முழக்கம் செய்தார்!

ஆனால் யார் மூட்டை பூச்சி என்பதை பின்னால் தான், யார் நசுக்கப்பட்டார்கள் என்பதை இப்போது தான் உணர்ந்தார்!

ஆச்சாரியாரை விட சஞ்சிவி ரெட்டி எந்த விதத்திலும் தைரியசாலியல்ல, துணிச்சல்காரருமல்ல என்பதை நாடு அறியும்! அவரும் இதை அறிவார்—இப்போதல்ல — அடுத்த ஆண்டு—அதாவது தலைமைப் பதவி போன பின்பு!

திரு. சஞ்சிவி ரெட்டிக்கு தைரியமில்லையே தவிர சிலபல குணங்களில் ஆச்சாரியாரை ஒத்தவர் என்பதை அவரே நமக்கு எடுத்துக் காட்டி இருக்கிறார்!

காந்தியார் சம்பந்தி, திரு. சக்ரவர்த்தி ராஜகோபலாச்சாரியார் எதிர்களை திட்டுவது போல் பாசாங்கு செய்து தன் கட்சிக்காரர்களுக்கு சாட்டையடி கொடுப்பார்! அதைத் தான் இவரும் செய்திருக்கிறார்!

மதுரை காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில்-காங்கிரஸ் கட்சிக்கு ஆபத்து எதிர்களால் ஏற்படாது — காங்கிரஸ்காரர்களால் தான் ஏற்படும்" என்ற உண்மையை தெளிவாக்கி, காங்கிரஸ் காரர்களின் ஊழலை வெளிப்படுத்தி இருக்கிறார்!

"காங்கிரஸ் கட்சியினர் நற்பெயரைக் கெடுக்கும் சில மோசமான காங்கிரஸ்காரர்களால் தான் இந்த அபாயம் இருக்கிறது" என்று கூறி இருக்கிறார்!

அப்படி என்றால் என்ன பொருள்? காங்கிரஸ் கட்சியில் கொள்கையற்றவர்கள், குறிக்கோள் இல்லாதவர்கள், சுயநலக்காரர்கள் என்று தானே பொருள்! ஆமாம் உண்மை தான்! அவரே கூறுகிறார்—" காங்கிரஸ்காரர்கள் சட்டசபை நாட்டத்தில் இறங்கி விட்டார்கள், பொது மக்களோடு தொடர்பு கொள்வதில்லை" என்று!

இப்படி சுயநலம் மிகுந்து விட்ட காங்கிரஸ் கட்சியால் யாருக்கு லாபம்! ஏன் அந்த கட்சி இன்னும் உயிரோடு இருக்க வேண்டும்! நாட்டையாளவா? மந்திரி வேலை பார்க்கவா? அதனால் ஒரு சிலர் ஏற்றம் பெறவா?

திரு. சஞ்சீவி ரெட்டி பதில் சொல்லட்டும்!

எங்களை நசுக்குவதற்கு முன்பு உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! இல்லையேல் நீங்கள் நசுங்கி போய் விடுவீர்கள்! எங்களை அழிப்பதற்கு முன்பு நீங்களே அழிந்து விடுவீர்கள்! பத்ரம், ஜாக்ரதை, கவனம் இருக்கட்டும்!

திரு. சஞ்சீவி ரெட்டிக்குத் தான் நம்மைப் பற்றி சரியாகத் தெரியவில்லை என்றால் அளகேசனுருக்கு கூடவா தெரியவில்லை?

பலமாக அடிபட்ட பின்பும் அளகேசனார் துள்ளுவது ஏன்? புரியவில்லை, உண்மையாகவே புரியவில்லை!

இப்படி கித்தாப்புப் பேசி வரும் அளகேசனார் எந்த இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்! காஞ்சியா? சென்னையா? எங்கே சென்றாலும் உம்மைவிட மாட்டோம்! தோல்வி, தோல்வி! நீர் தோல்வி தான்! இதற்கிடையில் உமக்கேன் இந்த வீறாப்பு!

"அணையும் விளக்கு பிரகாசிக்கும்" என்பார்களே அதைப் போலவா? ஆமாம், என்பதை 1962ல் அறிவீர்கள்! அதுவரை கத்துங்கள்! கர்ஜியுங்கள்! முழங்குங்கள்! யாருக்கு சேதம்!

மொழி-நாடு என்ற உணர்ச்சி

நமது அமைச்சர்களுக்கில்லை !

(டி. கே. சீனிவாசன் பேச்சு)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களுக்கு இல்லையே என் செய்வது?

நமது நண்பர் பேசும் போது குறிப்பிட்டார் திராவிட நாடு கேட்ட பெரியாரே வேண்டாம். என்கிற போது இவர்கள் ஏன் கேட்கிறார்கள் என்று ஒரு காங்கிரசு அமைச்சர் பேசினாராம்.

அந்த அமைச்சருக்குக் கூறுகிறேன் திராவிட நாடு பிரச்சினையை உருவாக்கியவரோ நமது அண்ணா தான் அவரை வைத்து தான் பெரியார் திராவிடநாடு கோரிக்கையை வற்புறுத்தினர், இன்று அவர் கைவிட்டு விட்டார் என்றால் அங்கு நமது அண்ணாவும் நாமும் இல்லை. அங்கு உணர்ச்சியும் கொள்கை பிடிப்பும் கொண்டவர்கள் இல்லை! அதனாலேயே அதை விட்டார்.

நாங்கள் திராவிட நாட்டுப் பிரச்சினையை எங்கள் லட்சிய முழக்கமாக வைத்திருக்கிறோம். அதனால் தான் எங்கள் மக்கள் நலமடைவார்கள் என்று எண்ணுகிறோம்! அந்த லட்சியத்தை அடையும் எந்த தியாகமும் செய்யத தயாராக இருக்கிறோம்.

பெரியார் விட்டு விட்டால் நாங்கள் விட்டு விட வேண்டுமா? இப்படி பேசுவது அர்த்தமற்றது.

இந்த வட்டத்துக் கழகச்செயலாளர் பேசும் போது கூறினார்! இங்குள்ள போலீஸ் அதிகாரிகள் இங்குள்ள மக்களிடம் தவறான முறையில் நடந்து கொள்வதாகுவதாகவும் கூறி சில கடுமையான சொற்களை உபயோகப்படுத்தினர். நான் அவருக்குக் கூற ஆசைப்படுகிறேன். இம்மாதிரி அதிகாரிகளை கடுமையாகத் தாக்கக் கூடாது. அந்த மாதிரி தவறு செய்தால் பெரிய அதிகாரிகளிடம் கூற வேண்டும் இன்றேல் நமது தலைமைக் கழகத்தின் மூலம் இதை நிவர்த்திக்க வேண்டும். போலீஸ் அதிகாரிகள் நமக்கு விரோதிகளல்ல அவர்களிடம் நாம் பகை கொள்ளக் கூடாது.

இங்கு சமீபத்தில் கூடிய ஒரு கூட்டத்தில் ஒரு திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர் பேசினாராம்,

நாம் திரு ஆச்சாரியாரின் கட்சியான சுதந்திராக் கட்சிக்கு ஆதரவு தருவதாகவும் ஆச்சாரியாருடன் நமது அண்ணா அவர்கள் தொடர்பு கொணடிருப்பதாகவும் கூறினாராம்.

இது மிகவும் மட்டமான பேச்சு நாம் ஆச்சாரியாரின் கட்சியில் எப்பொழுதும் சேரமாட்டோம் அவருக்கும் நமக்கும் கொள்கையில் பலத்த மாறுபாடுகள் இருந்து வருகிறது. அதோடு நமது கழகம் ஜனநாயக முறையில் இயங்கிவரும் ஒரு கட்சியாகும். அது மக்களின் கருத்துக்கு விரோதமாக—கொள்கைக்கு மாறுபாடாக எதுவும் செய்யாது. அப்படி யாரும் செய்யமாட்டார்கள். இது நம் மீது வீண் பழி சுமத்துவதாகும்.

இன்று திராவிடர் கழகம் எந்த காங்கிரஸ் கொள்கைகளைக் கண்டித்ததோ, எந்த காங்கிரஸ் நாட்டிலிருந்து அழிய வேண்டு மென்றதோ அதைக் காப்பாற்ற வந்திருக்கிறது அது போல் நாம் செய்ய மாட்டோம், நமது தலைவர்கள் செய்ய மாட்டார்கள். இப்படி யெல்லாம் கூறி நமது செல்வாக்கைக் குறைக்க வேண்டு மென்று நினைக்கிறார்கள். இந்த எண்ணம் பலிக்காது.

தென்னாடு தேய்கிறது, வட நாடு வாழ்கிறது என்பது ஆபத்தமானது இது அடுக்கு மொழிக்காகக் கூறுகிறோம் என்று அமைச்சர்கள் கூறுகிறார்கள்.

இன்று அவர்களின் இந்த பனிரெண்டு ஆண்டு ஆட்சியில் தென்னக மக்களின் வாழ்க்கை எந்த வகையில் உயர்ந்திருக்கிறது கூற முடியுமா?

சென்னை மேல் சபையில் டாக்டர் ர.லட்சுமணசாமி முதலியார் அவர்கள் எவ்வளவு ஆதரங்களோடு இவர்களின் திறமையற்ற செயல்களை விளக்கியிருக்கிறார். மத்திய சர்க்கார் இந்த மாநிலத்திற்குச் செய்ய வேண்டியதைச் செய்யாதிருப்பதையும் கண்டித்து இந்த மாநில அமைச்சர்களுக்கு தானகச் செய்யும் அதிகாரம் எதுவும் இல்லை என்றும் வருத்தத்துடன் கூறியிருக்கிறார்.

அது மட்டுமா இங்கு மக்கள் பசியாலும், பட்டினியாலும், வாடுவதைக் கண்டு மத்திய சர்க்கார் என்ன செய்தது!

வட நாட்டில் தொழில் வளங்கள் எப்படி வளர்ந்திருக்கிறது. இங்கே தொழில் வளங்கள் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்தாலே தெரியும்,

சேலத்தில் இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி நாம் எவ்வளவு சொன்னாலும் அது பற்றி கவனிக்கவில்லை.

நாடு விடுதலை அடைந்து பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகியும் இங்குள்ள வறுமை நீங்கிற்றா? இந்த வறுமையைப் போக்க மத்திய அரசு என்ன செய்தது.

தென்னகத்திலிருந்து வரிகளைக் கொள்ளையடித்து, தென்னக மக்களிடமிருந்து சுரண்டி, தென்னாட்டை அவர்களின் வேட்டைக் காடாக்கி அவர்கள் நாட்டை வளம் பெறச் செய்கிறார்கள்

நமது அறிஞர் அண்ணா அவர்கள் கூறுவது போன்று இங்குள்ள அமைச்சர்களுக்கு நாட்டுப் பற்றில்லாது வடவரின் அடிமைகளாக இருக்கிறார்கள்.

அதனாலேயே தென்னகம் தனியாகப் பிரிய வேண்டும் வடவரின் பிடியிலிருந்து நாம் விடுதலை அடைய வேண்டுமென்று கூறுகிறோம். இந்த உணர்ச்சியை அழிக்க எதை எதையோ கூறிப் பார்க்கிறார்கள். அதனால் அவர்கள் வெற்றியடைய முடியாது.

கடைசியாக உங்களிடம் ஒரு விஷயம் கூறி முடிக்கிறேன்.

காங்கிரசோ, திராவிடர் கழகமோ மற்றும் வேறு எந்தக் கட்சிகளோ திட்டுவதைக் கண்டு தூற்றுவதைக் கண்டு கவலைப் படாதீர்கள். நீங்கள் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். நமது கழகத்தின் பெயரைச் சொன்னாலேயே வளர்ந்து விடுவோம் என்று நம்மை அலட்சியம் செய்தவர்கள் நம்மைக் கேலி கண்ணோடு பார்த்தவர்கள் இன்று நம்மைப் பற்றி பேச வந்து விட்டார்கள். அப்படியானால் நாம் வளர்ந்திருக்கிறோம் என்பது தான் அதன் பொருள். ஒருவர் தூற்றுவதால் ஒரு கட்சி அழிந்து விடாது. மறைந்து விடாது! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நமது மூல மந்திரத்தை மனதில் வைத்து நமது கழக வளர்ச்சிக்கும் பாடு படுவதுடன் நமது அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி நடக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்,

...

நமது வாலிபர்கள் பலமற்றிருக்கிறார்கள்-காரணம் வாழவிக்கும் அரசு இல்லாததால் !

(அண்ணா பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டும் நாம் வெற்றிப் பெறப் போகிறோம்

“அண்ணாதுரை மந்திரிப்பதவிக்காக ஆசைபபட்டு இப்படி கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறான் என்று சிலர் கூறுகிறார்கள்

நான் மந்திரிப் பதவி பெற ஆசைப்பட்டிருந்தால் மாணிக்க வேலராக வேண்டியதில்லை! ராமசாமிபடையாச்சி ஆகவேண்டியதில்லை.

காமராஜரைப் பார்த்து ஒரு புன் சிரிபபு சிரித்திருந்தால் நானும் மந்திரியாகி இருப்பேன்’ எனக்கு மந்திரி பதவி வேண்டுமென்கின்ற எண்ணம் கிடையாது, இழந்த அரசை பெற வேண்டு மென்பதே எனது நோக்கமே, யன்றி ஆட்சியிலிருக்க வேண்டிதில்லை,

இன்று உலகத்திலிருக்கும் சின்னஞ்சிறு நாடுகளெல்லாம அதாவது நார்வே சூபன்டென் மார்க் போன்ற சின்னஞ்சிறு நாடுகளெல்லாம்-எந்த விதமான வளங்களோ வளர்ச்சி பெறுவதற்கான பொருள்களோ அங்கில்லை நமது நாட்டில் கோலாரில் தங்கம்பெருக்கிறது சேலத்தில் இரும்பிருக்கிறது நெய்வேலியில் நிலக்கரி இருக்கிறது இங்கே சிமெண்ட் கிடைக்கிறது அதில் சந்தனம், தேக்கரும்பு ஆழ்கடல் வாணிபப் பெருக்கம் இவை எல்லாம் இங்கே இருக்கிறது

சமீபத்தில் இங்கு வந்த நாசரைத் தலைவராகக்கொண்டுள்ள எகிப்தில் என்ன இருக்கிறது சூயஸ்கால்வாய் மூலம் வசூலிக்கும் பணத்தை தவிர அங்கு என்ன கிடைக்கிறது

அந்த நாட்டுத் தலைவரை பிரதமர் நேரு கட்டித் தழுவி புன்னகையோடு வரவேற்கவில்லையா பிரான்சில் என்ன இருக்கிறது! மயக்கம் தரும் திராட்சை ரசமும், மங்கையைத் தவிர ஆகவே அந்த நாடுகள் எல்லாம் வளமோடு வாழும் போது நாம்வாழமுடியாதா அப்படிச் சொல்பவர்கள் வரலாறு அறியாதவர்கள் எனவே நீங்கள் எல்லாம் மிகவும் கட்டுப்பாடுடனும், கண்ணியத்தோடிருந்து நமது லட்சியம் நிறைவேறப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்,

பெற்றெடுத்த தங்கங்களைத்தான் காண்கின்றனர்!

“ கோலார் தங்க வயலில் தங்கம் தோண்டி எடுக்கப் படுகிறது. ஆனல் நமது தாயமார்கள் தங்கத்தையே காண முடியவில்லை. அதற்குப் பதில் தாங்கள் பெற்றெடுத்த அருமை தங்கங்களைத் தான் காண்கின்றனர்.

நம் தாய்மார்கள் முத்துக்களைப் பார்த்திருக்கமாட்டார்கள் அவர்கள் தங்கள் தங்கங்களின் முல்லைச் சிரிப்பில் தெரியும் முத்துப் பற்களைத் தான் காண்கின்றனர் ஏன், நாம் இன்று ஒரு இனத்தாருக்கு அடிமைகள். இங்கு கிடைக்கும் பொருள்கள் அவர்கள் சுரண்டிக் கொண்டு போகிறார்கள்.

—அறிஞர் அண்ணா.

காமராஜர் மீது ஒரு புன்னகை வீசினுல் போதும் மந்திரி பதவி தன்னுலே வந்து விடும்!

(அண்ணு பேச்சு)
(4ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி யிருந்த நாம் இங்கு வாழவழியின்றி, பர்மா சிலோன் சிங்கப்பூர் முதலிய நாட்டிற்குச் சென்று பிழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இன்று உண்பதற்கு; உடுப்பதற்கு, இருப்பதற்கு வகையின்றி குழி விழுந்த கண்களுடன், ஒளியிழந்து வாழும் நிலைக்கு வந்திருக்கிறோம்!

ஒரு வேளை உணவு சாப்பிட வசதியின்றி தாய் மகன் முகத்தைப் பார்க்கவும், தாய் தந்தை முகத்தைப் பார்க்கவும். தந்தை இந்த இருவர் முகத்தைப் பார்க்கவும் வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது ஏன் நம்மீது அக்கறையுள்ள அரசு இல்லை, நம்மவர்கள் நம்மை ஆளவில்லை, அதனாலேயே நமது அரசு வேண்டுமென்கிறோம்! அடிமைப் பட்டிருக்கும்நம் நாடு விடுதலை அடைய வேண்டுமென்கிறோம்.

நமது நாட்டில் இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் போட்டு வேலைகள் செய்யப்பட்டு இப்போது மூன்றாவது ஐந்தாண்டு திட்டமும் போட முயற்சிகள் நடைபெற்று வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 2000 கோடி ரூபாயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6000 கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 3வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10,000 கோடி ரூபாய் செலவழிக்கவும் திட்டங்கள் போடப்படுகிறது! இதனால் நமக்கு என்ன நன்மை.

நான் ஒன்று வேதனையுடன் கூறுகிறேன். இங்கு ஏராளமான மக்கள் கூடியிருக்கிறீர்கள்! உங்களில் பெரும் பாலோருக்கு 100 ரூபாய் நோட்டு எப்படி இருக்குமென்று தெரியாதிருக்கலாம். ஏன் நோட்டுகளையே பார்க்காதவர்களே இருப்பார்களென்றே நினைக்கிறேன். அவர்களுக்கு வாழ்க்கைக்குப் போதுமான பணமே கிடைக்காத போது நோட்டுக்களை எங்கே பார்க்கப் போகிறார்கள்!

நமது நண்பர் என். வி. நடராசன் ஒரு லட்ச ரூபாய் மொத்தமாகப் பார்த்தார். இது சொல்லும் போது உங்கட்கு ஆச்சரியமாக இருக்கலாம்! திருச்சி மாநில மாநாட்டின் போது பார்த்தார்.

இப்படிப்பட்ட மக்கள் இருக்கும் இந்த நாட்டில் இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் போடப்பட்டும், கோடிக் கணக்கானப் பணம் செலவு செய்யப் பட்டும் அவர்கள் வாழ்க்கை வளம் பெறவில்லை யென்றால் இதன் காரணமென்ன எல்லாத் திட்டங்களும் வடக்கில் இருப்பவர்களுக்குத் தான் பயன்படுகிறது. தெற்கில் இருப்பவர்களுக்கு எந்தவித பயனும் ஏற்படவில்லை. அங்குள்ளோர் தெற்கு வேறு என்று எண்ணுகிறார்கள், ஆனால் இங்குள்ளோர் அனைவரும் ஒன்றென்று நினைக்கிறார்கள்!

நமது நாட்டில் ஒரு பழமொழி கூறுவதுண்டு "தாயும் மகளும் ஒன்றென்றாலும் வாயும் வயிறு வேறு" என்று நம்மிடம் அவர்கள் இந்தியா ஒன்று என்று கூறி உரிமை கொண்டாடினாலும் அவர்கள் வயிற்றைத் தான் பார்க்கிறார்கள்! அதனால் நாம் அவர்களிடமிருந்து பிரிந்து நம் வயிற்றைப் பார்க்க வேண்டுமென்று எண்ணுகிறோம்.

இங்குள்ள நமது மக்கள் பல மாடி வீடுகளைக் கட்டுகிறார்கள். பல அருமையான துணிகளை நெய்கிறார்கள்; அப்படிப்பட்டவர்கள கட்டியவர் தெருவோரங்களிலும் சாலை ஓரங்களிலும் வாழ்க்கை நடத்தி உயிர் விடுகிறார்கள்!

இதைத் தடுக்க இந்த துரைத்தனம் முயற்சித்திருக்கிறதா காட்டில் வாழும் கொடிய மிருங்களான சிங்கம், புலி, கரடி இவைகள் காட்டில் திரிந்து கிடைப்பதைக் கொன்று தின்று விட்டுத் தூங்குவதும். பின் மீண்டும் அதே போல் செய்வதும் வழக்கமாகக்கொண்டிருக்கிறது.

இங்கு மக்களோ பிழைக்க வழியின்றி இருக்கிறார்கள்!

இதையெலலாம் நாம் கூறும் போது நம்மை தவறாக நினைக்கிறார்கள்!

நீங்களெல்லாம் ஒற்றுமையாகவும் கட்டுப்பாடுடனும் பாடுபட்டால் நம் நாடு நிச்சயம் விடுதலை அடையும்!

அப்போது நம்மக்கள் இன்புற்றிருப்பார்கள். நம்மைப் பற்றி எதிர்கால மக்கள் பாராட்டுவார்கள்,

தந்தைமார்களுடன் பிள்ளைகளும், தாத்தாக்களுடன் பேரர்களும் நாடு விடுதலை யடைந்ததைப் பற்றி கேட்டு மகிழ்வார்கள் தாத்தாக்களும், தந்தைமார்களும் நம்மைப் பற்றியும் நமது பணியைப் பற்றியும். நமக்கிருந்த எதிர்ப்புகளைப் பற்றியும் கூறுவார்கள்.

"பேரன் கேட்பான், தாத்தா நம்ம எதிர் வீட்டு ஏகாம்பரம் நாட்டு விடுதலைக் காப்பாடுபட்டாரா" என்று கேட்பான்.

அப்போது தாத்தா சொல்லுவார்.

"எதிர்வீட்டு ஏகாம்பரம் நாட்டு விடுதலைக்கு எதிராக இருந்தார் என்று. பேரன் என்ன நினைப்பான்! இப்படிப்பட்ட துரோகிகள் கூடவா நம் நாட்டில் வாழ்ந்தார்கள், இப்படி காட்டிக் கொடுக்கும் கயவர்கள்இருந்தார்களா என்று நினைப்பான் இதற்கு இடம் வைக்காதீர்கள்! ஆண்ட பரம்பரை அடிமையாக இருக்கிறோம் நம்மை அண்ட வந்தவர்கள் அரசாள்கிறார்கள்! இதைப் போக்க எங்களுடன் சேருங்கள்.

எங்களைப் பார்த்து மாற்றார்கள் கேட்கிறார்கள்! உங்களால் திராவிட நாடு பெற முடியுமா என்று!

காலஞ் சென்ற மகமதலி ஜின்னா அவர்கள் பாகிஸ்தான் பிரிய வேண்டுமென்று கேட்ட போது உடனே பிரித்துக் கொடுத்து விட்டார்களா எத்தனை எதிர்ப்பு, நாட்டைப் பிரிக்கவிடமாட்டோம் என்று கூறியவர்கள் எத்தனை பேர்கள், இந்தியாவைத் துண்டு போடுவது "பாரதமாதாவை வெட்டுவது போன்றது என்றவர்களும், "பசுவைத் துண்டுப் போடுவது என்பவர்களும் இருந்தார்கள்.

பண்டித நேரு எதிர்த்த எதிர்ப்புகள் "நான் ஒரு போது பிரியவிட மாட்டேன் என்று முழக்கமிட்டதும் யாரும் மறந்து விட முடியாதே முஸ்லீம்கள் இனத்தால் ஒன்று சேர்ந்தார்கள் மாறுபட்ட கருத்துடைய முஸ்லீம்களும் ஜனாப் ஜின்னாவுக்கு ஆதரவு தந்தார்கள் எதிர்ப்பு பலமாயிற்று முஸ்லீம்களின் இன உணர்ச்சியை அடக்க முடியாதென்று உணர்ந்தனர், ஜின்னாவிடம் ஓடினர் உங்கள் எல்லை எதுவரை என்று கேட்டார்கள், அதற்கவர் என்னிடம் கேட்காதீர்கள் டாக்டர் அம்பேத்கார் எழுதிய புத்தகத்தைப் பாருங்கள் அதில் இருக்கிறது எங்கள் எல்லை என்று கூறினார். டாக்டர் அம்பேத்கார் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் பாக்கிஸ்தானின் எல்லையைப்பற்றி எழுதியிருந்தார். அந்தப் பேச்சின்போது அங்கிருந்தார்

காரணம் என்ன? முஸ்லீம்கள் கொண்டிருந்த இன உணர்ச்சியும், நாட்டுப் பற்றேயாகும் நேரு எப்போதும் எதையும் ஆரம்பத்தில் ஒத்துக்கொள்ள மாட்டார் கடுமையாக எதிர்பார் ஆத்திரப்படுவார் கடுமையாகத்திட்டுவார் எதிர்ப்பாளர்களின் எதிர்ப்பு பலக்கிறது. மக்கள் உணர்ச்சி வளர்கிறது என்று தெரிந்தால் சத்தமில்லாது ஒப்புக்கொள்வார் அதே போன்றுதான் பாக்கிஸ்தானை எதிர்த்தவர்கள் ஒப்புக்கொண்டார்கள் அந்த இன ஒற்றுமை எங்களுக்கு வராதா எங்கள் மக்கள் ஒன்று படமாட்டார்களா அது நடக்கத்தான் போகிறது எங்கள் நாட்டை ஆளத்தான் போகிறோம்

நமக்கெல்லாம் நாம் திராவிடர்கள் என்ற உணர்ச்சி வரவேண்டும், நமது நாடு என்ற எண்ண வரவேண்டும் நமது மொழி என்ற பற்று வர வேண்டும்

அப்படி வரத்தான் போகிறது அதை இன்று கண்டு தானே வருகிறோம் நமது நாடு கிடைப்பதற்கு எத்தனை நாட்கள் பிடிக்கும், இப்போது எதிர்ப்பவர்களின் எதிர்ப்பு எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்

இங்கு துடிப்புள்ள வாலிபர்களும், நாடு நமதாக வேண்டுமென்று ஆர்வமுள்ள இளைஞர் பலர் முன்வந்துவிட்டார்கள்

என்னையும் நமது கழகத்தையும் தாக்குவதையும் கண்டு நான் சகிக்கமாட்டேன் என்று நண்பர் அன்புரோஸ் கூறினார் ஜின்னாவைத் தாக்கியபோது ஜின்னா கலங்கவில்லை அவர் உள்ளம் துடிக்கவில்லை

பம்பாயில் மராட்டியர்கள், குஜராத்திகள் கிளர்ச்சி ஏற்பட்டது அதனால் பம்பாயில் குழப்பம் ஏற்பட்டது

மராட்டியர்கள் தாங்கள் ஒரு மா வீரனின் பரம்பரையினர் அவர்கள் வாழும் பகுதியைச் சேர்த்து தனிமாநிலமாக்கவேண்டுமென்று கேட்டார்கள் இதை அரசினர் எதிர்த்தார்கள். பண்டித நேரு அப்படிக் கேட்பது அறிவீனம் என்று கூறினார். மக்களின் எதிர்ப்பு பலத்தது. "நானே நேரில் போய் அடக்குகிறேன்" என்று பம்பாயுக்கு வந்தார்! மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசினார். "பிரிவினை மனப்பான்மை கொள்வது முட்டாள் தனம்" என்று சொன்னார் மராட்டியர்கள் "மராட்டிய மாநிலம் வேண்டும் என்று சத்தமிட்டார்கள் குஜராத்திகள் எங்களுக்கு "குஜராத்தி மாநிலம் வேண்டுமென்று கூச்சல் போட்டார்கள்! இப்படி சத்தம் போட்டால் உதை கிடைக்கும் என்று பயமுறுத்தினார்!

மீண்டும் மக்கள் தங்கள் மாநிலம் பிரியவேண்டுமென்று கூச்சலிட்டார்கள் ஏன் கரடி போலும், புலிபோலும் கத்துகிறீர்கள் என்று மிரட்டினார் இப்படி நீங்கள் கிளர்ச்சி செய்தால் உங்களை அடக்குவேன் என்றார். மக்கள் உணர்ச்சி அடங்கவில்லை.

போலீஸார் தடியாலும் அடித்தும் ராணுவத்தார் துப்பாக்கியால் சுடவும் ஆரம்பித்தார்கள் மக்கள் தலைகள் ரோட்டில் உருண்டன இரத்தம் ஆறாக ஓடிற்று அமளியை அடக்க முடியவில்லை. அதற்கு பின் டெல்லி சர்க்கார் அந்த மாநிலத்தை பிரித்துக் கொடுப்பதென முடிவு செய்து விட்டனர். அந்த விழாவை ஆரம்பிப்பதற்கு யார் வருகிறார்கள் தெரியுமா? அன்று மராட்டி மாநிலம் வேணடுமென்று கேட்டதை எதிர்த்தவரும் மராட்டியாரை முட்டாள்களென்று கூறிய வருமான பிரதமர் நேருவே வருகிறார் அந்த மாநிலத்தை பிரித்துக்கொடுப்பதற்கு ஆகவே நம்மை மதத் தப்புக்கணக்கு போட்டவர்கள் இந்த கடந்தகால சரித்திரத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும்

மராட்டியர்களைப் போல குஜராத்தியர்களைப் போல் திராவிடர்களுக்கு இன உணர்ச்சி வராது என்று நினைத்தால் அது தங்களையே தாங்கள் ஏமாற்றிக் கொள்வது போலாகும்!

நம்முடைய லட்சியம் இன்று உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்து விட்டது. பாராளுமன்றத்திலும் பேசும் நிலைமை வந்து விட்டது, ஆகவே நம்மை ஏசுபவர்கள் ஏசிக் கொண்டிருக்கட்டும் கேலியும் கிண்டலும் செய்துகொண்டிருப்பவர்கள் செய்து கொண்டிருக்

(8-ம் பக்கம் பார்க்க)

யாருக்கும் கிடைக்காத அரும் பெரும் தலைவரை நாம் பெற்றிருக்கிறோம்!

அவர் வழி நின்று - அரும் பணி புரிவோம் வாரீர் !

பேராசிரியர் அன்பழகன் அறிவுரை!

சென்னை 67-வது வட்டம் எழும்பூர் கெங்குச் செட்டி தெருவில், 13-4-60ம் நாள் சி. நரசிம்மன் அவர்கள் தலைமையில் காலஞ்சென்ற ஏழுமலை நினைவு மன்ற துவக்க விழா நடைபெற்றது!

அது சமயம் தோழர்கள், பாஸ்கரன், மணிவண்ணன எம், சி. தி, சு. கிள்ளிவளவன், கே, ராசாராம் பி ஏ, ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள் திரு. கே. ராசாராம் நினைவு மன்றத்தை துவக்கி வைத்தார்.

கடைசியாக, பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ., எம். எல். ஏ. அவர்கள் காலஞ்சென்ற தோழர் ஏழுமலை உருவப் படத்தை திறந்து வைத்து சொற்பொழி வாற்றியதாவது.

அன்புள்ள தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! தோழர்களே! ஓராண்டுக்கு பின் உங்களையெல்லாம் சந்திக்க முடிந்தது. இந்த தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினரான நான் ஓராண்டுக்குப் பின்—காலம் தாழ்ந்து உங்களைச் சந்தித்தமைககு மன்னிக்கவும் நான் என்னுடைய கடமையிலிருநது தவறி விட்டு மன்னிப்புக் கேட்கவில்லை. என்னுடைய கடமையிலும் நான் தவறியதில்லை! எனக்கு கடமைகள் இப்போது அதிகம் ஆகி விட்டது. சட்ட மன்றத்திலும் சுற்று புறங்களிலும் சென்று கழகத்திற்காக பணியாற்ற வேண்டிய நிலையில் இருப்பதால் உங்களையெல்லாம் சந்திக்க முடியவில்லை, ஓராண்டுக்கு பிறகு சந்திக்க வாய்ப்பளித்த இந்த மன்றத்து தோழர்களுக்கு நன்றிக் கூறிக் கொள்கிறன்,

நமது திராவிட முன்னேற்றக் கழகம் சிறந்த முறையில் நாடெங்கும் — நகர மெங்கும் பணியாற்றி வருகிறது! நகர மன்றத்திலும் நமது கழகம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்பதை நல்லெண்ணம் படைத்தோர். பொதுப் பணியில் ஈடுபட்டுள்ளோர் யாரும் மறுக்க முடியாது. நம்முடைய தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரையில் யாவரும், தங்கள் கடமைகளைச் செய்வதிலும் பொதுப் பணியாற்றுவதிலும் தவற மாட்டார்கள்,

அதன் நினைவாகவே, இன்று இந்த இடததில ஒரு அரிய பெரும் வாய்ப்பைப் பெற்றோம். காலம் சென்ற தோழர் ஏழுமலையவர்கள் இந்த வட்டத்தில், கழகத்திற்காக மிகவும் தொண்டாற்றியவர், அவர் செய்த தொண்டினை—பணிகளை மறந்து விடாமல் அவரது ஞாபகார்த்தமாக இந்தப் பகுதியில் ஏற்படுத்தும் ஏழுமலை நினைவு மன்றத்தைக் கண்டு மெத்த மகிழ்கின்றேன்.

திருவுருவப்படத்தை திறந்ததும் அவரது முகத்தைப் பார்த்தேன். நெடுநாட்களுக்கு முன் அவரது முகத்தைப் பார்த்ததால் மறந்து விட்டேன். இப்போது பார்த்ததும் அவர் முகத்தில் கடமை திகழ்கிறது, அவரது முகத்தில் கண்ணியம் மிளிர்கிறது, அவரது முகத்தில் கட்டுபபாடு திகழ்கிறது, அவர் மிகவும் ஏழையானவர், வாணிபம் செய்து வந்தவர். அதோடு மக்கள் தொண்டும் செய்தவர். அவர் மக்கள் உள்ளத்தில் தியாக வீரராக இடம் பெற்று விட்டாரென்றால் அது அவர் ஆற்றிய பணியால் தான்.

“திராவிட நாட்டை. மீட்க வேண்டுமானால், சாதாரணத் தொண்டனாக இருந்தால மட்டும் போதாது கடமை உணர்ச்சியோடு கண்ணிய மனப்பான்மையோடு, கட்டுபபாட்டோடு பணியாற்ற வேண்டும். இல்லா விட்டால் தாயகத்தை... திராவிடத்தை மீட்க முடியாது, தோழர் ஏழுமலையவர்கள் அவ்விதம் பணியாற்றியதால் புகழடைந்தார். தோழர் ஏழுமலையவர்கள் ஒரு எம், எல். ஏ. பதவி கிடைக்குமென்றோ, எம். பி, பதவி கிடைககுமென்றோ, நகர மனற உறுப்பினர் பதவி கிடைக்குமென்றோ, கனவுகூட கண்டிருக்க மாட்டார்.

அதே போன்று நம்முடைய எல்லாத் தோழர்களும் பணியாற்றினால் கழகம் அரிய பெரும் வாய்ப்பினைப் பெற்று விடும். ஏழுமலை போன்ற தியாக வீரர்களின் பெயரால் மன்றங்கள் ஏற்படுத்தி ஆற்றுகின்ற பணியானது திராவிட முன்னேற்றக் கழகததின் வளர்ச்சியே ஆகும், அது அவருக்குக் காட்டும் நன்றியாகும். அரசியலில் ஈடுபட முடியாதவர்கள் துணை மன்றங்களில் பங்கு கொண்டு ஜாதியை முறியடித்து, கேடுபாடுகளை நீககி படிப்பகங்கள் ஏற்படுத்தி சமூக சீர்திருத்தப் பணிகளை செய்வார்கள மனறங்களில் பங்கு கொண்டவர்கள் ஒற்றுமையோடு, உள்ளன்போடு, விட்டு கொடுக்கும் ஆற்றலோடு பணியாற்ற வேண்டும். கிளைக் கழகங்களில் பணியாற்றுகிறவர்கள் கழகத்தின் கொள்கைகளை ஏந்திப் பணியாற்ற வேண்டும்.

நண்பர் ஏழுமலையைப் போன்ற, உத்தமர்களாக, நல்லெண்ணம் கொண்டவர்களாக, விட்டுக கொடுத்து பணியாற்ற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஏன் நீங்கள் பொங்கல் விழாக் கொண்டாட வில்லையென்று சில நண்பர்கள் கேட்டார்களாம் சென்ற ஆண்டு வசூலான தொகை ரூ. 37. அந்த சமயத்தில் நமது தோழர் ஏழுமலை இறநது விட்டார். அவர் இறந்ததால் பொங்கல் விழாக் கொண்டாடவில்லை. அவர் இறந்த இறுதிச் சடங்கு செலவு 17 ரூபாய் ஆகிவிட்டது மீதி 20 ரூபாயில் இந்த நினைவு மன்றத்தை துவக்கியுள்ளார்கள். அந்த நேரத்தில் தோழர் ஏழுமலை இறந்ததாலேயே பொங்கல் விழா நடத்தவில்லை.

நாம் எங்கு பேசினாலும், எந்த மேடையில் பேசினாலும், கட்டுப்பாட்டுடன் பேச வேண்டும். எதிர் காலத்தில் திராவிடத்தை பெற வேண்டிய நாம் மாற்றுக் கட்சியினரை—காங்கிரசாரை திட்டக்கூடாது. எதிர் கட்சியினரை திட்டுவதற்காக நாம் மேடையமைக்கவில்லை, அவர்கள் எது வேண்டுமென்றாலும் பேசட்டும். அண்ணாதுரை அப்படிபட்டவன், நெடுஞ்செழியன் நெட்டையானவர் என்றோ, அன்பழகனுக்கு அறிவே கிடையாது, என்றோ பேசட்டும். அது எங்களோடு போய் விட்டது. அதற்காக நீங்கள் மேடை அமைததுக் கொணடு எதிர்க் கட்சியினரை திட்டக் கூடாது, அவர்கள் நம்மைத் தாரளமாக திட்டட்டும், ஏசட்டும்.

அவர்கள் அமைத்துள்ள மேடை தாழ்ந்து இருப்பதாலும்—அவர்கள் கூட்டமும் தாழ்ந்து இருக்கிறது. தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் ஓ. வி. அளகேசன் கூட்டத்தில் பேசுகிறபோது நம்மைத் திட்டாமல் இருப்பதில்லை, அந்த தலைவா மிகவும் மட்டரகமான நிலையில் பேசி வருகிறார், பேசட்டும். இன்னும் கிராமங்கள் தோறும் சென்றும் நம்மைத் திட்டட்டும்.

ஒரு சமயம் நமது முதலமைச்சர் காமராசர் சொன்னார், அண்ணாவைப் பார்த்து. நீங்கள் ஒரு முறை டெல்லிக்குச் சென்று வாருங்கள். அப்போது தான் உங்கட்கு அங்குள்ள நிலை தெரியும் என்று கூறி, அதற்கான செலவை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றார்.

அப்போது நான் கூறினேன் எங்கள் அண்ணா இரண்டு முறை டில்லிக்குச் சென்றிருக்கிறார். அவர் அங்கு சென்று பார்க்க வேண்டியதிலலை. தயவு செய்து உங்கள் காங்கிரஸ் தொண்டர்களை கொஞ்சம் கிராமம் கிராமமாக,.. பட்டி தொட்டி யெல்லாம் அனுப்புங்கள், அவர்கள்— அங்கு தொண்டர்கள் கிராமங்களிலும், ஊர்களிலும் எங்களைத் திட்டுவார்கள். அவர்கள் திட்டுவதால் எங்களுக்கு நன்மை ஏற்படும். எங்கள் கட்சி வளரும். என்று நான் சொன்னேன். ஆகவே அவர்கள் திட்டட்டும் நாம் திட்டக் கூடாது. நமது அரும் பெரும் தலைவர் அறிஞர் அண்ணாவும் இதைத்தான் அடிக்கடி கூறுவார். ஆகவே யாரும் மேடையமைத்து எதிர்க்கட்சியினரைத் திட்டாதீர்கள், அது பண்பல்ல; நாகரிகமாகாது என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம் சென்னை நகரம் நாறுகிறதென்றும், நகர மன்றம் ஊழல்கள் நிறைந்திருக்கிறதென்றும் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

இதைக் கேட்டதும் எனக்கு வேடிக்கையாக இருந்தது இது மாதிரி காமராசர் பேசியிருந்தாலும் கவலைப் பட்டிருக்க மாட்டேன். படித்துப் பட்டம் பெற்ற சுப்பிரமணியம் பேசுகிறார் என்றால் அதற்காகப் பரிதாபபட வேண்டியது தான்.

நிதியமைச்சர் பேசியது போன்று வேறு ஒருவர் பேசியிருந்தால் அவர் வாய் நாற்றமெடுக்கிறதென்று கூறியிருக்கலாம்.

ஆனால் நமது நிதியமைச்சரின் பல் பளபளவென்று வெள்ளையாக இருககிறது அப்படிப்பட்டவர் இப்படிப் பேசுகிறார்.

ஆனால் நமது முதலமைச்சர் காமராசர் நகரமன்ற சுகாதார விழாவில் கலந்து பேசும் போது நகரமன்ற சேவையைப் பாராட்டியிருக்கிறார், அவர் நகரத்தின் சுகாதாரத்திற்கு கூட்டு முறையில் கட்சிபேதமின்றி பாடுபட அழைத்திருக்கிறார்,

நகரத்தின் நலனுக்காக நல்ல பல திட்டங்கள் தீட்டிக் கொடுங்கள் அது மக்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தால் அதற்காக செலவாகும் பணத்தை எப்படியாவது, எங்கு கடன் வாங்கியாவது கொடுக்கிறேன். என்று கூறியிருக்கிறார். முதல் அமைச்சர் இப்படிக் கூறுகிறார் நிதியமைச்சர் அப்படிக் கூறுகிறார். இதனால்தான் படித்தவர்களைவிட படிக்காதவர்கள் நல்லவர்கள் அவர்களுக்கு நல்ல பண்பு இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

முன்பெல்லாம் நாற்றமெடுக்காத நகரசபை இந்த ஓராண்டில்தான் நாற்றமெடுக்கிறதா. காங்கிரசின் முக்கிய பேச்சாளரும், சட்டமன்ற உறுப்பினரும். முன்னாள் நகரமன்ற

(11ம் பக்கம் பார்க்க)

மைல் கற்களில் இந்தி வேண்டாமென்றால் — தமிழரை குருடர் என்கிறார் நிதியமைச்சர்!

(அன்பழகன் பேச்சு)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினராக இருந்த தோழியர் அனந்தநாயகி அம்மையார் இந்த இரண்டாண்டில் மூன்று முறை சட்டமன்றத்தில் பேசியிருக்கிறார் அவர் இந்த நகர சபையைப்பற்றி பேசியுள்ளார் நகரசபையைப்பற்றி முதன் முதலாக இரண்டாண்டுகட்கு முன் சட்டமன்றத்தில் பேசினார். அப்போது அவர் நகர மன்ற உறுப்பினர்.

அவர் கூறினார்.

சென்னையிலுள்ள பெரிய ஆஸ்பத்திரியிலும், நகர மத்திய சிறையிலும் உள்ள கழிவுப் பொருள்கள் கூவம் நதியில் கலப்பதால் நாற்றம் பெருகி நகரில் நோய் பரவ ஏதுவாகிறது. இதைத் தடுக்க வேண்டும், இதற்கு வடிகால் கட்டி கழிவுப் பொருள்கள் வேறெங்காவது போகும் படியான முறையில் செய்ய வேண்டும்” என்றார்.

பின் இரண்டாவது முறையாக ஓராண்டாக்கு முன் பேசினார். அப்போது நகர மன்ற உறுப்பினராக இல்லை. அபபோது பேசினார் “நகர மன்றம் ஏற்கனவே அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது, நகரத்தில் கழிவுப் பொருளகளை வெளியில் கொண்டுபோக வடிகால் திட்டம் அமைக்க உதவி கேட்டிருக்கிறது, அரசாங்கமும், அமைச்சர்களும் கவனிக்கவில்லை, இதனால் நகரில்நோய் பரவும்” என்று மூன்றும் முறையும் சமீபத்தில் அரசாங்கத்தைக் கண்டித்து பேசியிருக்கிறார்,

இதற்கு நிதியமைச்சர் என்ன பதில் கூறுகிறார்,

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அனந்தநாயகி அம்மையாரே நகரம் நாற்றமெடுப்பதற்குக் காரணம் கூறுகிறாரே இது நிதியமைச்சருக்குத் தெரியாதா!

நிதியமைச்சர் சட்டமன்றத்தில் அமைச்சர்களுக்கெல்லாம் தலைவர். அவர் சட்டமன்றத்தில் பேசும் போது ஒரு விதமாகவும், வெளியில் ஒரு விதமாகவும் பேசுகிறார். என்ன செய்வது,

சென்னை நகரில் இப்போது தண்ணீர் பஞ்சம் அதிகமாகி மக்கள் தொல்லைக்குள்ளாகி இருக்கிறார்கள்,

கடந்த 40 ஆண்டுகட்கு முன் இந்த நகரில் 7 லட்சம் மக்கள் வாழ்ந்தார்கள், இன்று 20 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள், 7 லட்சம் மக்களின் தேவைக்கு வகுக்கப்பட்ட தண்ணீர் திட்டம் இன்றிருக்கும் 20 லட்சம் மக்களுக்குப் போதுமா? 6½ லட்சம் மககளுக்கே போதாமலிருக்கிறது,

திராவிடமுன்னேற்றக் கழகம் நகரசபை பொறுப்பேற்ற பின் இந்த தண்ணீர் பஞ்சத்தை எப்படி நீக்குவது என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தது, ஆந்திர மாநிலத்திலுள்ள கிருஷ்ணா பெண்ணாறு நதியிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டு வரலாம் என்று முடிவு செய்து அதற்கு 16 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டமிட்டு அரசினருக்கு தெரிவித்தது.

அது சாத்தியமில்லையென்றால் தென்னாற்காடு மாவட்டத்தில் காவிரிநதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரலாம் என்று முடிவு செய்து அதற்கு 12 கோடி செலவாகுமென திட்டமிட்டு அரசினருக்கு அனுப்பியது. அரசினர் இதுவரை வாளாக இருந்தது, இப்போது தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கொண்டு வரலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம் என்று காமராசர் சர்க்கார் தெரிவித்திருக்கிறது,

நகரத்தில் சுகாதாரம் சரிவர இல்லை, நிர்வாகம் சரிவர இல்லை நகர சபை பணிகள் சரிவர நடைபெறவில்லையென்று குறை கூறுகிறார்கள். அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி சுமத்துவதற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தார் கையில் ஆட்சிப் பொறுப்பிருக்கிறதே என்ற பொறாமையாலுமே யாகும். மற்றும் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். நகரத்தின் பணிகள் சரிவர நடைபெறவில்லையென்றால் அது நகரசபையிலுள்ள அதிகாரிகளின் கவனக் குறைவாலுமே யாகும்: நகர மன்றம் ஆலோசனை கூறவும், திட்டங்கள் கொடுப்பதற்கே தான் அதிகாரம் பெற்றிருக்கிறது, நிர்வாகப் பொறுப்பு முழுதும் கமிஷனரின் கையிலிருக்கிறது, அதிகாரிகளும், சிப்பந்திகளும், சரிவர வேலை செய்யாததாலும் குறைகள் ஏற்படுகிறது. அதோடு அரசகங்கமும் இவர்கள் திட்டங்களுக்கு அனுமதி கொடுப்பதில்லை இத்தனையும் இருக்கும் போது நகர மன்றத்தின் மீது குறைகூறி விட்டால போதுமா?

இப்போதுள்ள குறைகள் இந்த ஒரு வருடத்தில் தான் இருக்கிறதா? இதற்கு முன் இல்லையா?

நகரமன்றம் சரிவர நடைபெறாது இருந்து வந்ததைமாற்றி நகரின் நன்மைக்கான பல திட்டங்களை வகுத்து கடன்காரராக நகர மன்றமாக இருந்ததை மாற்றி நல்ல முறையில நடந்து வருவதற்கு பாராட்ட வேண்டியவர்கள் திட்டுகிறார்கள். இன்று அமைச்சர்களுக்கு மனோவியாதி வந்து கண்டபடி தூற்றுகிறார்கள்.

சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும், நகரமன்றத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் நல்லமுறையில் பணியாற்றி வருகிறது, பொது மக்களின் நலனுக்கான எல்லா விஷயங்களையும் நல்ல முறையில் விவாதிக்கிறது.

உணவுப் பண்டங்களின் விலைகள் விஷம் போல் ஏறி மக்கள் தொல்லை பட்டார்கள் அதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல முறையில் பாடுபட்டது புளி, அரிசி, சர்க்கரை விலைகளைக் குறைத்து மக்கள் வாழ்க்கை நலமடைய வேண்டுமென்று அரும்பாடுபட்டது, அது மட்டுமல்ல நாட்டுப் பிரச்சினையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் தனது கடமையைச் செய்து வருகிறது! நிதியமைச்சர் சுப்பிரமணியம் வடநாட்டுக்காரர்களுக்கு வக்காலத்துப் பேசுவதிலேயே முனைந்திருக்கிறார்,

இன்று வட நாட்டுக்காரர்கள் தங்கள் மொழியான இந்தியைப் புகுத்தி, தங்களது ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டப்பார்க்கிறார்கள்.

அதற்கு நமது மாநில அமைச்சர்களும் உடந்தையாக இருக்கிறார்கள். தமிழுக்குத் துரோகம் செய்கிறார்கள்.

சட்ட மன்றத்தில் ஒரு முறை கேள்வி கேட்கும் போது, நெடுஞ்சாலைகளில்மைல்கற்களில் இந்திமொழியில் எழுதப்படுகிறதே. இதைத் தடுக்கப்படுமா என்று கேட்டபோது நெடுஞ்சாலை மத்தியசர்க்காரைச் சார்ந்தது மாநிலசர்க்கார் ஒன்றும்செய்வதற்கில்லைஎன்றுஅந்த இலாகா அமைச்சர் கக்கன் அவர்கள் பதில் கூறினார்கள்,

மற்றும் கேட்கப்பட்டது. நெடுஞ்சாலை மத்திய சர்க்காருக்கு உட்பட்ட தென்றாலும் இந்தி தெரியாதவர்கள் எப்படி மைல் கற்களில் இருக்கும் இந்தியைப் புரிந்து கொள்வார்கள் என்று கேட்டதற்கு கக்கன் அவர்கள் கூறினார்கள். மைல் கற்களில் முதலில் தமிழும், இரண்டாவது இந்தியும், மூன்றாவது ஆங்கிலமும் இருக்குமென்று பதில் கூறினார்.

இந்த சமயத்தில் நிதியமைச்சர் சி சுப்பிரமணியம் தான் ஒருகதை சொல்லப் போவதாக எழுந்தார். அவருக்கு அந்த இலாகா சம்பந்தமில்லையானாலும் அவர் மந்திரிகளுக்கெல்லாம் தலைவர் அதனால் எழுந்து நான் ஒரு குட்டிக் கதை கூறப்போகிறேன். என்று எழுந்தார். நாங்களெல்லாம் எண்ணினோம், இவர் குட்டிக்கதைகள் கூறுவதில் வல்லவரான ஆச்சாரியாரின் சிஷியராயிற்றே ஏதோ குட்டிக் கதை சொல்லப் போகிறார் பார்ப்போம், என்று அவர் கூறும் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

நிதியமைச்சர் குருடன் கதை சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு ஊரில் ஒரு குருடன் இருந்தான் அவன் தன் கையில் விளக்குப் பிடித்துக் கொண்டு போனான் அவன் பின்னால் ஊராரெல்லாம் சிரித்துக் கொண்டே சென்றார்கள் என்று கூறியதும் நமது கருணாநிதி அவர்கள கண்ணாடி போட்டிருந்த குருடனா என்று கேட்டார். உடனே நான் கேட்டேன் தமிழர்கள் குருடர்களா, அதற்குள் ஆசைத்தம்பி ஒழுங்குப் பிரச்சினை கொண்டுவந்தார் உடனே நிதியமைச்சர் “ஏன் இப்படி ஆத்திரப்படுகிறீர்கள் கதை சொல்லுவதைப்பொறுமையுடன் கேளுங்கள் என்று கதை சொலல ஆரம்பித்தா.

நான் கேட்கிறேன் படித்த நிதியமைச்சரை குருடன் எப்படி விளக்கேற்றினார். கோல் இல்லாது எப்படிப் போனான், பட்டப் பகலிலேயே கோலில்லாது போக முடியாதே இரவில் எப்படி சென்றான் ஆகவே அவர் பொறுத் தமில்லாமல் தமிழ் உணர்ச்சியை இழிவுபடுத்த இப்படி குட்டிக் கதை கூறுகிறார்!

வடநாட்டுக்காரர்கள் பகிழ்வதற்காக தமிழர்களைக் காட்டிக் கொடுக்கிறார்கள்! இந்தமாதிரி கருத்துக் குருடர்கள் தான் நம்மை குருடர்கள் என்று கேலி செய்கிறார்கள்.

நிதியமைச்சர் சுப்பிரமணியம் அதிகாரம் இருக்கிறதென்ற காரணத்தால் அரசியலில் குருடர்களாக இருந்து மத்திய சர்க்காரின் ஏஜண்டுகளாக இருக்கிறார்கள்.

நமது அண்ணா அவர்கள் கேட்டார்கள் வடநாட்டில் மைல் கற்களில் தமிழ் இல்லாவிட்டாலும் ஆங்கிலம் போட்டிருக்கிறார்களா என்று கேட்டார்! அதற்கு நிதியமைச்சர் சரியான பதில் கூறவில்லை!

நமது மாநில போலீஸ் அமைச்சர் எம். பக்தவச்சலம் எப்போதும் இந்தியை ஆதரித்தவர் இப்போது மைல் கற்களில் இந்தி எழுதுவதை எதிர்க்கிறார்! காரணம் அவர் சமீபத்தில் வடநாடு சென்று சுற்றியவர் சரியாக வழி தெரியாததால் கிளம்பிய இடத்திற்கே திரும்பி வந்து விட்டார்! 50 மைல்கள் அதிகமாக காரில் சுற்றியிருக்கிறார். தன் காரில் பெட்ரோல் அதிகம் செலவாகி இருக்கிறதால் இப்போது கூறுகிறார் மைல் கற்களில் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று இப்போது தான் அவருக்குத் தெரிகிறது. இந்தி மொழி இருப்பதால் வரும் கேடுகள் பற்றி வடநாட்டில் ஆச்சாரியார் பேசிய போது இந்தியில் பேசுஎன்று இந்தி வெறியர்கள் கலாட்டா செய்தார்கள். அதே போல் நமது முதலமைச்சர் காமராஜர் சென்றாலும் அதே கதி தான் ஏற்படும். நமது நிதியமைச்சர் சென்றாலும் அதே கதிதான் ஏற்படும். நமது அண்ணா சென்றாலும் அதே நிலை தான் ஏற்படும். அவர்களுககு மொழி வெறிபிடித்திருக்கிறது. அவர்களுக்குள்ள மொழி வெறி உங்களுககு ஏன் இல்லை. அவர்கள் மொழியைப் பெரிதாகக் கருதுகிறார்களே! ஆனால் நமது அமைச்சர்களோ நம்மொழியின் மீது ஆசையோ, பாசமோயின்றி தமிழுக்கு துரோகம் செய்கிறார்களே.

வட நாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது என்பதற்கு பல உதாரணங்களைக் காட்டி வந்திருக்கிறோம்.

ஆனால் வடநாட்டில் தான் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கிறது. நாம் வடநாட்டில் மட்டும் அதிக தொழிற்சாலைகள் இருப்பதேன் என்று கேட்டால் அவர்கள் அங்கே தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு ரயில் பாதை வசதி இருக்கிறதென்று கூறுகி

(12ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
இலங்கையில் 20 சதம்
Regd No M. 7074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285

காங்கிரஸ் சரிகிறது - மேடையும் தாழ்கிறது !

(அன்பழகன் பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுர்கள். தென்னுட்டிலும், சேலத்திலும் இரும்பு இருக்கிறது. நெய்வேலியில் நிலக்கரி இருக்கிறது. காவிரி நதிக்கரையில் பெட்ரோல் இருக்கிறது என்று ஜெர்மன் விஞ்ஞான ஆராய்ச்சிக் குழுவினரே கூறியுள்ளனர்

அதற்கு முன் சேலம் இரும்பு எதற்கு உபயோகப்படும் என்று கேட்ட அமைச்சர்கள் இன்று வாய் மூடி மௌனிகளாக இருக்கிருர்கள். நெய்வேலி நிலக்கரி நெய்யாக உருகிவிடுமே தவிர பழுப்பு நிலக்கரி உபயோகப்படாது என்று கூறினர்கள்.

பழுப்பு நிலக்கரியால் நல்ல எரி பொருள்களெல்லாம் கிடைக்கும் என்று ஜெர்மன் விஞ்ஞான ஆராய்ச்சிக் குழுவினர் கூறினர்கள். இதைக் கேட்ட அமைச்சர்கள் சரி இன்னும் ஐந்தாறு வருடங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி விடுவோம் என்று கூறுகிருர்கள்,

வடநாட்டில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமானுல் 2 ஆண்டுகளில் ஏற்படுத்துகிருர்கள்! தென்னுட்டில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமானுல் 6 ஆண்டுகள். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதற்கு இந்த உதாரணமே போதும்,

தென்னுட்டில் ஏன் ரயில் பாதைகள் போடவில்லை என்ருல் தொழிற்சாலைகள் இல்லை என்று கூறுகிருர்கள். ஏன் தென்னுட்டில் தொழிற்சாலைகள் இல்லை என்று கேட்டால் ரயில் பாதை வசதி இல்லை என்று கூறுகிருர்கள். அது இல்லாததால் இது இல்லை! இது இல்லாததால் அது இல்லை என்று பல்லவி பாடுகிருர்கள்.

வடநாட்டில் உள்ள ஜாம்ஷெட்பூரில் ஒரு டாடா தொழிற்சாலை இருப்பதால், பல தொழிற்சாலை ஏற்பட்டு விட்டது. அதே போல் தென்னுட்டில் ஒரு தொழிற்சாலை ஏற்பட்டு விட்டால் பல தொழிற்சாலைகள் ஏற்பட்டு விடும் என்று அஞ்சுகின்றனர்; ஆயாசப்படுகின்றனர்,

சென்ற ஆண்டு அழுகும் பொருள்களுக்கு ஆட்சியாளர்கள் வரிவிதித்தார்கள். அழுகும் பொருள்கள் வரியைமக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் காரணமாக நகர மன்றத் தேர்தலில் தோற்ருர்கள். வெங்காயம் காங்கிரஸ்காரரை வெறுக்கது உருளை கிழங்கு அவர்களை உதைத்து தள்ளியது.

அழுகும் பொருளினுல் ஆட்சிக்கு ஆபத்து வரும் என்று நினைத்து இந்த ஆண்டு அழுகும் பொருள் வரியை நீக்கி விட்டார்கள். அழுகும் பொருள் ஓட்டுகள் நம்மை அலட்சியப் படுத்திவிடும், கருணைக்கிழங்கு நம்மைக் கவிழ்த்து விடும் என்று கவலைப்பட்டு அழுகும் பொருள் ஓட்டை தாங்கள் அடைவதற்கு வரியை நீக்கியுள்ளார்கள்.

இதே போன்று நமது அமைச்சர்கள் ஓட்டைப் பெறுவதற்கு செய்து வருகிருர்கள். இது தான் ஜனநாயகமா? நமது கழகம் தான் ஜனநாயக முறையில் வளர்ந்து வருகிறது. நமது அண்ணு அவர்கள் ஜனநாயக முறைப்படி கழகத்தை கழகத் தோழர்களை இயக்கி வருகிருர்.

நம் அண்ணு நம்மை அன்பாலும் பாசத்தாலும் பண்பாலும் நம்மை வளர்த்து வருகிருர். எந்த நாடும் பெருத, யாருக்கும் கிடைக்காத அரும்பெரும் தலைவர் ஒருவர் இங்கே இருக்கிருர் என்ருல் நமது அன்பிற்கும் பாசத்திற்கும் உட்பட்ட அறிவுலகமேதை அறிவின் பெட்டகம் அண்ணுதான். அவர் காலத்திலேயே நமது நாட்டை பிரித்து நல்வாழ்வு வாழ கழக தோழர்கள் கடமைப்படும் கண்ணியத்தோடும் பாடுபட வேண்டுமென்றும் கழகத்தைக் கட்டிக்காக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுவிடைபெறுகிறேன்,

---

பண்டாரசன்னதியின் சட்டத்தைவிட இது மோசமானது !

கோயில் நிலங்களைப் பற்றி ஏன் ஷரத்து இல்லை?

குத்தகைதாரர்களுக்கு எதற்காக நஷ்ட ஈடு?

இந்தச் சட்டத்தை அடியோடு திருத்த வேண்டும்-சிரசாசனம் போட வேண்டும்!

நில உச்சவரம்பு சட்டம் பற்றி காங்கிரஸ் எம். எல். ஏ. நாராயணசாமி முழக்கம்!

காங்கிரஸ் சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கும் நில உச்சவரம்பு சட்டத்தை-ஏழைகளின் காமதேனு, எளியவர்களின் கற்பக விருட்சம் என்றெல்லாம் அமைச்சர்களும், அவர்களுக்குத் தாளம் போடும் தாசர்களும் வர்ணிக்கிருர்கள்! ஆனல் பல காந்தியவாதிகளே "இதைப் போல் ஒரு பிற்போக்கான சட்டமே இருக்க முடியாது" என்று சட்டசபையில் முழக்கம் செய்திருக்கின்றனர்! எடுத்துக் காட்டாக மாயவரம் தொகுதி சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஜி. நாராயணசாமி முழக்கம் செய்திருப்பதை படியுங்கள்!

ஆவலாக எதிர்பார்த்த குறிக்கோள் இந்த மசோதாவில் கிடைக்காது. சீர்திருத்தம் வரும் என்று பயந்து ஏற்கனவே குழி ஒன்று நான்கு ரூபாய்க்கு மிராசுதாரர்கள் விற்றிருக்கிருர்கள். ஆனல் இப்பொழுது நஷ்ட ஈடு முறையில் ஆறு ரூபாய் கிடைக்கும், இதனல் விற்றவர்களுக்கும் விற்காதவர்களுக்கும் ஒரு பிரிவினையை வேண்டுமானுல் இதனல் ஏற்படுத்தலாம் என்று கூறினர்.

குத்தகைதார்களுக்கு ஏன் சலுகை நஷ்டஈடு ஏன்? என்று புரியவில்லை. பண்டார சன்னிதிகளையும், டிரஸ்டி நிர்வாகிகளையும்காக்காய் பிடித்து உழுது சாகுபடி செய்வோரை வருத்திப் பணம் சம்பாதித்தது தவிர இவர்கள் வேறு ஒன்றும் செய்யவில்லை. இவர்களுக்கு ஏன் சலுகை? என்று திரு. நாராயணசாமி கேட்டார்.

மனைக்கட்டில் குடியிருக்கிறவர் கொல்லைப் புறத்தில் அவர் வைத்த மரத்தை வெட்டலாகாது என்று இந்தச் சட்டம் செய்கிறது! பண்டார சன்னிதிச் சட்டத்தைவிட இது மோசமாக இருக்கிறது என்று அவர் கூறினர்.

இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள இனிமேல் ஒரு பள்ளிகூடம் தான் வைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்! இந்த சட்டத்தை விட நியாய வாரச் சட்டமே மேலாகயிருக்கிறது என்று அவர் கருதினர்.

கோயில், மடம், தர்ம ஸ்தாபன நிலங்களைக் கூட்டுறவுச் சங்கத்தில் கொண்டு வருவதற்கு ஒரு ஷரத்து கூட இல்லை; அவ்விதமாவது மாற்றியமைக்க வேண்டும் என்று அங்கத்தினர் தெரிவித்தார்!

இந்தச் சட்டத்தை அடியோடு முற்றிலும் திருத்தி அமைக்க வேண்டும்! சிரசாசனம் போடச் செய்ய வேண்டும்! அப்பொழுது தான் ஏதாவது பலன் கிடைக்கும்! இந்த மசோதாவைத் திருத்துவது என்பது சரியாக இருக்காது என்று அவர் கூறினர்!

இச்சட்டத்தைக்கண்டு எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுமானுல் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்! நமது கட்சியினருக்கு அவ்விதம் இல்லை! செலக்ட் கமிட்டியிலும் கொட்டாப்புளி மிராசுதார்களாகப் போடாமல் உழவர்களாக போட்டு நியாயமான முறையில் திருத்தி அமைக்க வேண்டுமென்றும் அவர் கூறினர்.

தி.மு கவுக்கு மேலும் வெற்றி!

கழக ஆதரவாளர் தங்கவேலர் எம். எல். சி. ஆனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு பெற்று சென்னை வட ஆற்காடு—தென் ஆற்காடு செங்கற்பட்டு ஆகிய ஸ்தலஸ்தாபன பகுதிகளுக்கு சென்னை மேல் சட்ட சபைக்கு காஞ்சிபுரம் அ. க. தங்கவேலர் நின்றூர். அவருடன் போட்டியிட்ட எட்டுபேரில் இவர் அதிக ஓட்டுகள் பெற்று வெற்றியடைந்தார்.

நமது அறிஞர் அண்ணு அவர்களின் தேர்தலின் போது அவர் வெற்றிக்காக அரும்பாடு பட்டு உழைத்தவர் ஆவார் நமது இயக்கத்தின் ஆதரவாளர்களில் ஒருவருமாவார்.

யார் வேண்டுமானுலும் ஆட்சியிலிருக்கட்டும்

அரசு நமதாக வேண்டுமென்பதே நமது குறிக்கோள் !

"திராவிட நாடு" பிரிய வேண்டுமென்று நாம் கேட்கிறோம். இதைக் கண்டு மாற்ருர் நாம் பதவி ஆசைக் கொண்டு இவ்வாறு கூறுவதாக தூற்றிவருகிருர்கள். யார் வேண்டுமானுலும் ஆட்சி செலுத்தட்டும். ஆனல் அரசு நமதாக வேண்டும். இழந்த நம் நாட்டை மீட்பதே நமது லட்சியமாகும்.

அண்டியவனுக்கு அள்ளி அள்ளி கொடுத்த நாடு இன்று அவனிடம் கையேந்தி நிற்கிறது. இந்த அவல நிலையை களையவே நாடு பிரிய வேண்டுமென்று கூறுகிறோம்!

ஆண்ட பரம்பரை இன்று அடிமையாக வாழ்கிறது. அடிமை விலங்கை அறுத்தெறிந்து விடுதலை பெற யாவரும் வாரீர்!

—அறிஞர் அண்ணு

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.